Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS




உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்டுகளுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி- 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 சஃபான் 05 (10.09.2005) சனிக்கிழமை இதழ்:345

# மகிந்தவை கட்சியிலிருந்து நீக்க சந்திரிகா அதிரடி நடவடிக்கை?

## விளக்கமளிக்கக் கோரி எச்சரிக்கைக் கடிதம் அனுப்பினார்




கொழும்பு—

ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு, அவர்களுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது கடும் கோபம் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா-

இந்த நடவடிக்கையை காட்டமாகக் கண்டித்தும் விளக்கம் கோரியும் நேற்று எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளாார்.

இதையடுத்து - பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி சந்திரிகா அதிரடியாக - சுதந்திரக் கட்சியை விட்டு நீக்கலாமெனா கொழும்பில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா தனது கடிதத்தில் - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் - (12 ஆம் பக்கம் பார்க்க)



## இராணுவப் புலனாய்வாளர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா—

வவுனியா நகரில் நேற்றுக் காலை இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

நேற்றுக்காலை 11.15 மணியளவில் வவுனியா 2 ஆம் குறுக்குத் தெருவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சைக்கிள் ஒன்றில் சென்றுகொண்டிருந்த இராணுவப் புலனாய்வாளரான முகமட் ரபீக் (வயது 41) என்ற சிப்பாயை -மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின்தொடர்ந்துவந்த இரு இளைஞர்கள் பிஸ்டலால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

சனநடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் பொதுமக்கள் பலரும் பார்த்திருந்தபோதே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் முகமட் ரபீக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரிகளை பாதுகாப்பதற்கு பதிலாக பலியிடுவதற்கே முயற்சி!

### சிங்களப் பத்திரிகை சீற்றம்

கொழும்பு—

இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகளை பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு பலிகொடுப்பதாகவே இராணுவ உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களை நடவடிக்கைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் இயக்க உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா—

வவுனியா - திருநாவற்குளத்தில் புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

நேற்றுக்காலை 11.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கேதீஸ் எனப்படும் வில்வராசா கோபால் (வயது 45) என்ற புளொட் உறுப்பினரே உயிரிழந்தார்.

தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருடன் தனது வீட்டில் நின்றபோதே, சைக்கிள் ஒன்றில் வந்த இரண்டு இளைஞர்கள் இவர்மீது சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவத்தீல் வில்வராசா கோபால் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண



### நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண

# புறூவ்ஹொவ்டேயை இலங்கைக்கு நோர்வே அரசாங்கம் அனுப்புகிறது!



ஒஸ்லோ —

இலங்கை அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றபோதும் கடந்த சில மாதங்களாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து கவலை வெளியிட்டுள்ள நோர்வே அரசாங்கம் -

போர்நிறுத்த உடன்பாட்டை முறையாக அமுல்படுத்துவது குறித்து இரு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்த தனது விசேட பிரதிநிதியாக கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ்கொவ்டேயை விரைவில் அனுப்பவுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக றோயல் நோர்வேஜியன் அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தபோதும், அண்மைக் காலமாக இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துவருவது குறித்து நோர்வே கவலை கொள்கிறது.

அனுசரணையாளர் என்ற வகையில் போர்நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுக்களை நடத்துவது குறித்து கடந்த சில மாதங்களாக ஆலோசனை நடத்தியது. இருந்தபோதும், (12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளைத் தடைசெய்யும்

# இலங்கை அரசின் கோரிக்கைக்கு ஐரோப்பிய யூனியன் கைவிரிப்பு!

பிரஷெல்ஸ் —

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய யூனியன் தடைசெய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. ஆனால், இது குறித்து ஐரோப்பிய யூனியனிலுள்ள ஒவ்வொரு நாடும் தனித்துத் தனித்தே முடிவெடுக்கும் என்று ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பெரேரா வோல்ட்னர் தெரிவித்தார்.

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக கொழும்பில் நடைபெறும் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்க வேண்டும்.

போர்நிறுத்த அமுலாக்கப் பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் உயர்நிலையிலான பேச்சுக்கள் நடத்தப்படும். புலிகள் எப்படியான விடயங்களை முன்வைத்தாலும் அவர்கள் பேச்சு மேசைக்கு கண்டிப்பாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் அதிரடிப்படை கெடுபிடி

# புலிகளின் பகுதிகளுக்கான போக்குவரத்துக்குத் தடை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும், இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குமிடையிலான பொதுமக்கள் போக்குவரத்திற்கு நேற்றுக்காலை 10.00 மணிவரை விசேட அதிரடிப் படையினரால் தடை விதிக்கப்பட்டது.

இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நண்பகல் வரை இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 10.00 மணியுடன் இந்தத் தடைகள் நீக்கப்பட்டபோதிலும், படையினர் ஆத்திரமடைந்தநிலையில் காணப்பட்டனர். இதனால், அச்சம் காரணமாக அந்தப் பாதைகள் வழியாக குறிப்பாக இளைஞர்களும், ஆண்களும் பயணம் செய்வதைத் தவிர்த்தனர்.

தாழங்குடாவில் நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட தாக்குதலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பரந்தாமன் ஆசிரம கட்டடத்திறப்பு விழா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலய பரந்தாமன் ஆசிரமத்தின் கட்டடத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், ஆலய அறங்காவல் சபைத்தலைவர் இ.அன்னலிங்கம், ஊர்காவற்துறை நீதிவான் பா.சுப்பிரமணியம், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா ஆகியோர் பிரதம விருந்தினராகவும்,

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி, அறங்காவல் சபைச் செயலாளர் கருணாமூர்த்தி, வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடற்தொழிலாளர் சமாசத்தின் பொது முகாமையாளர் க.சூரியகுமார், கிராம அலுவலர்களான மு.சிவசண்முகம், ந.சேகர், சி.சிவபாலசிங்கம், வெண்மை வாணிபர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் சி.சின்னத்துரை, வலம்புரி முகாமையாளர் வெற்றிவேல், வெண்மை வாணிபர் சங்கச் செயலாளர் கி.ரவி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வளர்மதி முன்பள்ளி விளையாட்டு விழா!

புத்தூர்

புத்தூர் வளர்மதி சனசமூக முன் பள்ளி விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் வ. நவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிதழ்வின் பிரதம விருந் தினராக அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பேரின் பநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் வெங்கடாச்சரம், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ந. ஜெகதீசன், வலி. கிழக்குப் பிரதேசசபை புத்தூர் பொறுப்பதிகாரி ஜெயகாந்தன், கிராம உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (12)

# திலீபனின் 18 ஆவது நினைவுநாளை முன்னிட்டு வன்னியில் இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திலீபன் மருத்துவ சேவையினரின் சிறப்பு மருத்துவ சேவை நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்த மருத்துவ சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை 10 இடங்களில் நடைபெறவுள்ளன.

மருத்துவ சேவை நடைபெறும் இடங்கள் வருமாறு-

| திகதி | நிலையம் | மருத்துவசேவை நடைபெறும் இடம் |
|---|---|---|
| 12.09.2005 | கற்சிலைமடு - | முத்துஜயன்கட்டு |
| 14.09.2005 | நயினாமடு - | மதியாமடு |
| 15.09.2005 | பூநகரி - | முட்கொம்பன் |
| 16.09.2005 | மாங்குளம் - | பெரியபுளியங்குளம் |
| 18.09.2005 | பிரமந்தனாறு- | கல்லாறு முகாம் |
| 19.09.2005 | ஐயன்குளம் - | தென்னியங்குளம் |
| 20.09.2005 | அளம்பில் - | ஆறுமுகத்தான்குளம் |
| 21.09.2005 | ஆழியவளை - | கட்டைக்காடு |
| 24.09.2005 | நவ்வி குஞ்சுக்குளம் - | நவ்வி |
| 25.09.2005 | மன்னார் - | குருவில் |

# ரஷ்யத் திரைப்படம்

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை மாலை 4.30 மணிக்கு லரீஷா என்னும் ரஷ்ய மொழித் திரைப்படம் தமிழ் உபதலைப்புக்களுடன் அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

# ஐவர் நாய்க் கடிக்கு இலக்கு!

சங்கானை

சங்கானை சந்தைக்கருகில் கட்டாக்காலியாக அலைந்த நாய் கடித்து கடந்த இரு நாட்களில் ஐந்துபேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் மூவர் உட்பட பொது மக்கள் இருவருக்கு அடுத்தடுத்த இரு நாட்களில் இந்த கட்டாக்காலி நாய் கடித்துள்ளது. இவர்கள் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் இதற்கான சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் ஒருவரை இந்த நாய் கடிக்க முற்பட்டபோது பொதுமக்கள் அதனை அடித்துக் கொன்றுள்ளனர். இவ்வாறான ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் சங்கானை மரக்கறி, மீன் சந்தை, பொது வீதிகளில் அலைந்து திரிகின்றன. இவற்றை அழிப்பதற்கான முயற்சிகள் எதுவும் சம்பந்தப்பட்டவர்களால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (48)

# விழிப்புணர்வு செயலமர்வு

கிளிநொச்சி

லங்கா ஆயுள்வேத சித்த மருத்துவக்கல்லூரியில் சுதேச மருத்துவப் பாதுகாப்புச் சபையால் சித்த மருத்துவ விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு நாளை காலை 9:30 மணிக்கு நடைபெறவுள்ளதால், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து சித்த மருத்துவ வைத்தியர்களையும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு சுதேச மருத்துவ பாதுகாப்பு சபையினர் தெரிவித்துள்ளனர்.


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

2 மாதம் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

அ.மயில்வாகனம் (ஈசன்), மானிப்பாய்மேற்கு, மானிப்பாய். பொன்னாலை வீதி, எக்காலத்தொனி சேச்சிற்கு முன் ஒழுங்கை. தொடர்பு- 077-6034877. (2045)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

கார்த்திக், ரோஜா, கௌசல்யா, விவேக் மற்றும் பலர் நடித்த

**சந்தித்த வேளை**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30 (பு.நே)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சத்தியராஜ், நமீதா, மதுமிதா, வடிவேலு நடித்த

**இங்கிலீஸ்காரன்**

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)

சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த

**தொட்டி ஜெயா**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் -

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு -

நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா

**அன்பே ஆருயிரே**



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

டொல்பி ஒலிநயத்துடன்

விக்ரம், சதா, விவேக் மற்றும் பலர் நடித்த

**அந்நியன்**



11.09.2005 முதல்

**பொன்னியின் செல்வன்**

காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)


# காரைநகர் மேற்கு பிரதேச முன்பள்ளி விளையாட்டு விழா

ஊர்காவற்துறை

ஊர்காவற்துறை பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் வழிகாட்டலில் நடத்தப்பட்டு வரும் காரைநகர் மேற்கு பிரதேச முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு தங்கோடை நாகம்மாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபை செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தீவகவலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கணபதி, ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.இராமுப்பிள்ளை, கிராம அலுவலர் என்.சண்முகசுந்தரம், சனசமூக நிலைய உத்தியோகத்தர் என்.மகேந்திரம் ஆகியோர் சிறப்பு விருந்தி னராகவும், தீவகவலய இணைப்பாளர் ஏ.யாழினி, காரைநகர் மு.கே.மே.நிலைய பிரதேச தலைவர் எம். திருக்குமார் ஆகியோர் கௌரவவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

மண்மகிழ 28 05 1978



விண்மகிழ 13 08 2005

### தவராசா சுகந்தன்

(காசாளர் நகரசபை வல்வெட்டித்துறை)

பார்த்தவர் கண் பூத்திருக்க பார்வியந்த சுகந்தா - எமை
பரிதவிக்க விட்டு நீயும் எங்கு ஓடிச் சென்றுவிட்டாய்!
அன்பான துணைவியவள் துடிதுடித்து கதறியழ
கண்ணைப்பறிக்கும் உந்தன் செல்லக் குழந்தை
அமுதமொழி கொண்டுன்னைஅப்பா என்றழைக்க முன்னர்
எங்கு நீயும் சென்றுவிட்டாய் ஏங்கிதினம் நாம் துடிக்க.

கடந்த 13.08.2005 அன்று சிவபதம் அடைந்த அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்] (2047)

பலாலி வீதி,
(நல்லூர் பிரதேச
செயலக முன் ஒழுங்கை)
திருநெல்வேலி.

இங்ஙனம்
மனைவி,
குரும்பசிட்டி தவராசா (தந்தை),
வடிவானந்தம் (குஞ்சு) மாமன்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 03 - 1927



மறைவு 22 - 08 - 2004

### அமரர் முருகேசு கந்தையா (ஆயம்)

எங்கள் அன்புள்ள அப்பாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாகியதே.
ஆறவில்லை எம்துயர் ஆதரவு யார் எமக்கு?
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
அவையாவும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டுகள் எத்தனை உருண்டோடினாலும்
உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சங்களில் நிறைந்தேயிருக்கும்.

திக்கரை,
களபூமி,
காரைநகர்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[2044]

# நமது ஈழநாடு

## மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

#### சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி

- ❖ படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- ❖ சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- ❖ கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ❖ படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

#### பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

மேற் பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

- ❖ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ❖ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ❖ கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- ❖ கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
"நமது ஈழநாடு"
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.

# சமாதான உடன்பாட்டுக்கான எத்தகைய தீர்வும் கலந்துரையாடல்கள் மூலமே ஏற்படுத்தப்படவேண்டும்

## ஐ.நா.பிரதிநிதியிடம் ஜே.வி.பி தலைவர்கள்

கொழும்பு—

மீண்டுமொரு போரை தாம் விரும்பவில்லை எனவும், சமாதான உடன்பாட்டுக்கான எந்தவொரு தீர்வும் கலந்துரையாடல்கள் மூலமே ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே தமது உயர்ந்தபட்ச நிலைப்பாடாக உள்ளதாகவும் தம்மைச் சந்தித்த ஐ.நாவின் விசேட பிரதிநிதி லக்டர் பிராமியிடம் ஜே.வி.பி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் ஐ.நாவின் விசேட பிரதிநிதி லக்டர் பிராமிக்கும், ஜே.வி.பி தலைவர்களுக்குமிடையே கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி சார்வில் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பை ஐ.நாவின் விசேட பிரதிநிதி லக்டர் பிராமி இலங்கை வெளியுறவு அமைச்சகம் மூலம் ஏற்படுத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி சார்பில் தெரிவிக்கப்பட்டதாவது-

தற்போதைய போர்நிறுத்த ஒப் பந்தம் விடுதலைப்புலிகளுக்கே அனுகூலமானது. எனவே இதில் ஜே.வி.பிக்கு உடன்பாடில்லை. ஜே.வி.பி எப்பொழுதும் உண்மையையே பேசி வருகின்றது. விடுதலைப்புலிகள் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறி வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதில் ஒருகட்டமே அமைச்சர் கதிர்காமரின் கொலையாகும். எனவே விடுதலைப்புலிகளுக்கெதிராக ஐ.நா அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் ஒரு வடிவமே சுனாமி பொதுக்கட்டமைப்பாகும். போர்நிறுத்த உடன்படிக்கையில் பல குறைபாடுகள் உள்ளன. இதில் முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளின் மேலாதிக்கத்துக்கு கீழ்வரமுடியாது. விடுதலைப்புலிகள் முஸ்லிம்களை மீளக்குடியமருமாறு கட்டாயப்படுத்துகின்றார்கள். ஆனால் அது அரசாங்கத்தினுடைய கடமை. அரசாங்கம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

இதன்பின் பிராமி கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையின் சமாதான முயற்சியில் ஐ.நா.தலையிடுவதற்கான எந்த நோக்கமும் இல்லை. அவ்வாறு இருந்தாலும், இது ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர்தான் சாத்தியமாகும். அதற்கும் இலங்கையில் ஸ்திரமான அரசொன்று நிறுவப்படுதல் முக்கியமானதென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆரம்பகட்ட தேர்தல் செலவுகளுக்கு திறைசேரி 8 கோடிரூபா ஒதுக்கீடு!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைக்காக எட்டுக் கோடி ரூபாவைத் திறைசேரி வழங்கவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முழுமையான செலவு 100 கோடி ரூபாவைத் தாண்டலாமெனத் தேர்தல் திணைக்களம் எதிர்பார்க்கும் அதேவேளை - தேவையான நிதி, குறித்தகாலப் பகுதியில் வழங்கப்படுமென திறைசேரி - தேர்தல் திணைக்களத்துக்குத் தெரிவித்துள்ளது.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான திகதி குறித்த வர்த்தமானி அறிவித்தல் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படுமெனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தேர்தல் மத்திய நிலையங்களை நடத்த முடியாத இடங்கள் குறித்து, உடனடியாக விபரங்களை வழங்குமாறு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மூலம் கிராம அலுவலர்களுக்குத் தெரியப்படுத்திய போதிலும், இதுவரை எந்தவித அறிக்கையும் கிடைக்கவில்லையென தேர்தல் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார். (தே)

# அரசாங்க ஊடகங்களை சுயாதீன மயப்படுத்துக!

## தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க கோரிக்கை

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலை நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்காக உடனடியாக அரச ஊடகங்களை சுயாதீனமயப்படுத்துமாறும் - தேர்தலைக் கண்காணிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துமாறும் தேர்தல் ஆணையாளரை ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளது.

அத்துடன், அரச ஊடகங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்க அதிகாரியொருவரை நியமிக்குமாறும் அந்தக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் கடந்த புதன்கிழமை தேர்தல் திணைக்களத்துக்கு சென்று, தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

இதற்கு சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதே தனது ஒரே நோக்கம் எனத் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் - அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தான் எடுப்பதாகவும் கூறினார்.

தற்போது அரச ஊடகங்கள் பக்கச்சார்பாக நடந்துகொண்டு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு நற்பெயரை ஏற்படுத்தும் வகையிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் தயாரித்து வெளியிட்டுவருவதாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்தனர்.

17 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்துக்கமைய கிடைத்துள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக்கொண்டனர்.

## கொழும்புத் துறைமுகத்தில் தமிழ் இளைஞன் கைது!

கொழும்பு—

கொழும்பு துறைமுகத்தின் டி.சேரம் நுழைவாசல் வழியாக அனுமதிப்பத்திரம் பெறாமல் உள்நுழைய முயற்சித்த தமிழ் இளைஞர் ஒருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் கைதான இந்த இளைஞர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர் என்றும், துறைமுகத்தினுள் நுழைவதற்கு இவர் உரிய காரணம் எதையும் கூறவில்லை எனவும் கடற்படையினர் தெரிவித்தனர். பின்னர் இவர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# ஆழ ஊடுருவும் அணியின் சிப்பாயே தாக்குதலில் பலி

கொழும்பு—

மட்டக்களப்பு - சித்தாண்டி சந்தியில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் படுகாயமடைந்து, பொலநறுவ வைத்தியசாலையில் உயிரிழந்த ரணசிங்க ஆராச்சிலாகே அனுரத்த குமார என்ற சிப்பாய் இராணுவத்தில் ஆழ ஊடுருவும் படையணியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டில் வந்துசேர்ந்த இவர் - அடிப்படை இராணுவப் பயிற்சியின் பின்னர் மூன்றாவது தேசிய காவற்படையில் இணைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் ஆழ ஊடுருவும் அணிப்பயிற்சியையும், விசேட பிளட்ரோம் பயிற்சியையும் முடித்திருந்தார்.

இவர் பொலனறுவ, சிங்கபுர பகுதிகளிலும் இறுதியாக மட்டக்களப்பிலும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். மரணத்துக்குப் பின்னர் இவருக்கு லான்ஸ் கோப்ரலாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்புச் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

# வெளிநாட்டு நாணயங்களுடன் யாழ்ப்பாண இளைஞன் கைது

கொழும்பு—

75 லட்ச ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய வெளிநாட்டு நாணயங்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து விமானம் மூலம் கொழும்பு வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழிலிருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் காலை சென்ற இந்த இளைஞரை கல்கிசை பொலிஸார் கைது செய்தனர்.

இவர் இதற்கு முன்னர் 7 முறை யாழிலிருந்து விமானம் மூலம் பல லட்ச ரூபா வெளிநாட்டு நாணயங்களை கொழும்புக்குக் கொண்டு சென்று செட்டியார் தெருவிலுள்ள நகைக்கடையொன்றில் கொடுத்து அவற்றை மாற்றி தரகுப்பணம் பெற்றுக் கொண்டு பஸ் மூலமோ, ரயில் மூலமோ யாழ்.திரும்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் பற்றி தகவல் அறிந்த கல்கிசை பொலிஸார் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து அவரைப் பின்தொடர்ந்து வந்து அவர் பஸ்ஸில் ஏற முற்பட்டபோது கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வேளை அவரிடம் 5 பணக்கட்டுகள் இருந்துள்ளன. அவற்றின் இருபுறத்திலும் ஆயிரம் ரூபா நோட்டுக்களை வைத்து மறைத்தே இவற்றைக் கொண்டு வந்துள்ளார்.

அமெரிக்க டொலர், யூரோ, ஜேர்மன் மார்க் அவுஸ்ரேலிய டொலர், பவுண்ட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களும் இவரிடம் இருந்துள்ளது.

# நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமானால் வடக்கும் - கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும்

## என்கிறார் அமைச்சர் அதாவுல்லா

கொழும்பு—

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால், வடக்கும் - கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும். இதுவே யதார்த்தம். இந்த யதார்த்தத்தை மக்களின் தலைவர்கள் எனக் கூறிக்கொள்வோர் புரிந்துகொள்ள வேண்டுமென்று அமைச்சர் அதாவுல்லா தெரிவித்தார்.

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்ட ஆதரவாளர்களின் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மொஹம் மதியா நகர் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்-

மக்களின் தலைவர்கள் எப்போதும் மக்களுக்கு நல்வழியைக் காட்ட வேண்டும். யதார்த்தத்தைப் புரிய வைக்க வேண்டும். இன்று முஸ்லிம் மக்கள் மாத்திரமல்ல, கிழக்கிலே வாழ்கின்ற மூவின மக்களும் ஒரு முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். யதார்த்தத்தை உணர்ந்து தாங்கள் மாத்திரமல்லாது, எதிர்கால சந்ததியினரும் நிம்மதியாக வாழக்கூடிய தீர்மானத்தை மேற்கொள்ளும் நிலையில் உள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்று ஏற்பட்டு, சமாதானம் ஏற்பட வேண்டும். எனவும் தெரிவித்தார்.

# பிரதமர் - ஹெல உறுமய உடன்படிக்கை பதின்மூன்றாம் திகதியன்று கைச்சாத்து

கொழும்பு—

ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பாக சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையேயான உடன்படிக்கை எதிர்வரும் 13ஆம் திகதி கைச்சாத்தாகவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி 9 மணியளவில் தலதா மாளிகையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார். மகிந்த ராஜபக்ஷவும், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரரும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர். அதன்பின்னர் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அஸ்கிரிய, மல்வத்தைப் பீடாதிபதிகளை மகிந்த ராஜபக்ச சந்திப்பார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க 11 நிபந்தனைகளுடனான இணக்கத்தை ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டது.

# விமானத்திலிருந்து குண்டுகள் எதுவும் மீட்கப்படவில்லை

## விமானப்படையினர் தெரிவிப்பு

கொழும்பு—

சவூதி அரேபியா ரியாத்தை நோக்கி கடந்த வியாழக்கிழமை புறப்படவிருந்த விமானத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிளப்பப்பட்ட புரளியையடுத்து விமானத்தை சோதனையிட்ட போதிலும் எந்தவித சந்தேகத்துக்குரிய பொருட்களும் கிடைக்கவில்லை என விமானப்படையினர் தெரிவித்தனர்.

விமானத்திலிருந்த அனைத்துப் பயணிகளினதும் பொதிகள் உட்பட விமானம் முழுமையாகச் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

சவூதி அரேபியா ரியாத்தை நோக்கி செல்லவிருந்த விமானத்தில் குண்டு வைக்கப்பட்டதாக கிளப்பப்பட்ட புரளியையடுத்து, விமானம் முழுமையாகச் சோதனைக்குட்ப்படுத்தப்பட்டது. அவசர கதவு திறக்கப்பட்டபோது அதிலிருந்து இறங்க முற்பட்ட பெண்ணொருவர் நெரிசல் காரணமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் மேலும் 87 பேர் காயமடைந்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிலர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை ஐந்து பெண்கள் - சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பத்து பெண்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



# ஸ்ரரஸ் அடித்த அபார சதத்தால் இங்கிலாந்து அணி வலுப்பெற்றது!

லண்டன் —

ஆஷஸ் கிண்ணத்துக்கான ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ஓவல் மைதானத்தில் ஆரம்பமானபோது - இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்களை எடுத்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி




பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக ட்ரெஸ்கொதிக்குடன் ஸ்ரரஸ் களமிறங்கினார்.

ஆரம்பத்தில் இவர்கள் இருவரும் அவுஸ்ரேலிய பந்துவீச்சை விளாசித் தள்ளினர். ஆனால், ஸ்கோர் 82ஆக உயர்ந்தபோது - ஷேன் வோனின் சுழற்பந்தில் ட்ரெஸ்கொதிக் ஆட்டமிழந்தார்.

அவர் 65 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 43 ஓட்டங்களை எடுத்தார். இதையடுத்து ஸ்ரரஸுடன் மைக்கல் வோண் இணைந்தார்.

எனினும் ஸ்கோர் 102ஆக இருந்த போது - இவரையும் ஆட்டமிழக்கச் செய்தார் ஷேன் வோன். வோண் 11 ஓட்டங்களை எடுத்தார்.


அடுத்து பலத்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய பெல், ஓட்டமெதையும்



பெறாமலேயே வோனின் பந்துவீச்சில் வெளியேற நேரிட்டது.

ஷேன் வோனின் பந்துவீச்சால் நெருக்கடிக்குள்ளாகிய இங்கிலாந்து அணிக்கு புதுத் தெம்பாக இறங்கிய பீற்றர்சனும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேரிட்டது.

ஸ்ரரஸ் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருக்க, எதிர்முனை விக்கெட்டுக்கள் அடுத்



தடுத்து சரிந்துகொண்டிருக்க - பிளின்ரொப் களமிறங்கினார்.


ஸ்ரரஸ் - பிளின்ரொப் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இதனால், ஸ்கோர் 274ஐ தொட்டது. அவ்வேளை, பிளின்ரொப் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 114 பந்துகளில் 12 பவுண்டரிகள், 1 சிக்ஸரை விளாசித் தள்ளினார்.

அடுத்துவந்த கொலிங்வூட் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். இதையடுத்து ஜோன்ஸ் ஆடுகளத்தினுள் நுழைய - ஸ்கோர் 297ஆக இருந்தபோது ஸ்ரரஸ் ஆட்டமிழந்து சென்றார்.


இவர் 210 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் 129 ஓட்டங்களைக் குவித்தார். அடுத்து ஜைல்ஸ் களமிறங்கினார். ஜோன்ஸ் 21 ஓட்டங்களுடனும், ஜைல்ஸ் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தபோது - முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

முதல்நாள் ஆட்டமுடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்களை எடுத்து.

முதல் நாள் ஆட்டத்தில் டெஸ்ட்



கிரிக்கெட்டில் 31ஆவது முறையாக 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் ஷேன் வோன். அதிக முறை 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளவர்களின்



பட்டியலில் மூன்றாவது இடத்தில் இவர் உள்ளார். இலங்கையின் முரளிதரன் (46), நியூஸிலாந்தின் ஹட்லி (36) முறையே முதலாம், இரண்டாம் இடங்களில் உள்ளனர்.

தவிர, இங்கிலாந்துக்கு எதிராக அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளவர்களின் வரிசையில் மேற்கிந்திய வீரர் அம்புரோஸின் (164) சாதனையையும் இவர் முறியடித்தார். வோன் 165 விக்கெட்டுக்களுடன் இரண்டாம் இடத்துக்கு முன்னேறினார். இந்தப் பட்டியலில் அவுஸ்ரேலியாவின் டெனிஸ் லில்லி (167 விக்கெட்டுக்கள்) முதலிடத்தில் உள்ளார்.

டெஸ்டில் 600 விக்கெட்டுக்களை எட்டிய உலகின் ஒரே வீரரான வோன், இந்தத் தொடரில் 33 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். மொத்தம் 616 விக்கெட்டுக்களை (128 டெஸ்ட்) வீழ்த்தியுள்ளார்.

## ஜனசக்தி கிண்ண உதைபந்தாட்டம்

# சென்.சேவியர் அணியை வென்று அரையிறுதிக்கு மனோகரா அணி

பருத்தித்துறை —

ஜனசக்தி சுழல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மனோகரா அணி காலிறுதியாட்டத்தில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது.

நேற்றுமுன்தினம் வதிரி டயமன்ஸ் மைதானத்தில் மனோகரா அணியை எதிர்த்து சென்.சேவியர் அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய போதே இரு அணிகளும் மிக விறுவிறுப்பாக விளையாடத் தொடங்கின.

ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் மனோகரா அணி வீரர் நிரோஜன் தட்டிக் கொடுத்த பந்தை மிக நேர்த்தியான முறையில் அதேயணியைச் சேர்ந்த சசிகாந் முதலாவது கோலாக்கினார். அதன்பின்னர் சென்.சேவியர் அணிக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும், அதனை பயன்படுத்த அவர்கள் தவறிவிட்டனர்.

அதைத் தொடர்ந்து 20 ஆவது நிமிடத்தில் மனோகரா அணியினருக்கு கோணர் வாய்ப்பு கிடைத்தது. அதனை அவர்கள் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி இரண்டாவது கோலையும் போட்டனர். அதன்பின்னர் சென்.சேவியர் அணியினர் மிகவும் விறுவிறுப்பாக ஆடினர்.

இதனால் 25ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணி வீரர் அடித்த பந்தை மனோகரா கோல்காப்பாளர் பிடித்து, தவறவிட்டபோது, சென்.சேவியர் அணி வீரர் றேமியன் குதிக்காலால் தட்டி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார். இதனால், இடைவேளைக்கு முன்னர் மனோகரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது- மனோகரா அணி, சென்.சேவியர் அணி கோலடிப் பதைத் தவிர்க்கவேண்டும் என்ற நோக்கில் தடுப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதனால் மிக ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் மனோகரா அணியினர் விளையாடினர். இதனால், மனோகரா அணிவீரர் பாலகரனிற்கு மஞ்சள் அட்டையும் காட்டப்பட்டது. மனோகரா அணியினர் எதிரணிக்கு ஆபத்தை உண்டுபண்ணும் முறையில் விளையாடியதால், சென்.சேவியர் அணிக்கு பல நேர் உதைகள் வழங்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பங்களையும் சென்.சேவியர் அணியினர் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இதனால், மனோகரா அணி - சென்.சேவியர் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (12)

விளையாட்டு



# பயிற்சி ஆட்டத்தில் இந்தியா மோசமான பந்து வீச்சு!

முடாரே —


சிம்பாப்வேக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் இந்தியாவின் மோசமான பந்துவீச்சால், டியான் இப்ராகிம் சதமடிக்க சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் அணி கௌரவமான ஸ்கோரை எட்டியது.

சிம்பாப்வே சென்றுள்ள இந்திய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதற்கு முன்னதாக இந்திய அணி மூன்றுநாள் பயிற்சிப் போட்டியில் விளையாடுகிறது.

சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் அணிக்கு எதிரான இந்தப் போட்டி முடாரே நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

ஷேவாக், யுவராஜ் போன்ற முன்னணி வீரர்களுடன் இந்திய அணி முழுப் பலத்துடன் களமிறங்கியது. முதலில் ஆடிய சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் அணி 91 ஓட்டங்களில் 6 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தவித்தது. இந்தநிலையில் டியான் இப்ராகிம் விளாசல் ஆட்டம் ஆடி அணிக்கு கைகொடுத்தார்.

இவருக்கு கெய்த் தபெங்வா நல்ல



ஒத்துழைப்பு அளிக்க முதல்நாள் ஆட்டநேரமுடிவில் சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் ஏழு விக்கெட் இழப்புக்கு 265 ஓட்டங்களை எடுத்தது. இப்ராகிம் 28 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 159 ஓட்டங்களுடனும், தபெங்வா 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இந்திய தரப்பில் கும்ளே 3, சகீர்கான் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# சச்சின் டெண்டுல்கர் மீண்டும் பயிற்சியை தொடங்கவுள்ளார்!

ஹராரே —



இன்னும் ஐந்தே நாளில் பயிற்சியைத் தொடங்கவுள்ளார் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர்.

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், முழங்கை காயத்துக்காக (டெனிஸ் எல்போ) சத்திரசிகிச்சை செய்தார். இதன் காரணமாக, மிக நீண்ட நாட்கள் அவர் கிரிக்கெட்டிலிருந்து விலகியிருந்தார். சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் விளையாடுவாரென அறிவிக்கப்பட்டது.


காயம் முழுவதும் குணமாகாததால், கடைசி நேரத்தில் விலகிக் கொண்டார். அவரது ரசிகர்கள் அதற்காக வருத்தப்படவேண்டாம். காயம் இப்போது குணமாகிவிட்டதாம். ஹராரே நகரில் இந்திய கிரிக்கெட் அணியின் டொக்ரர் ஜோன் குளோஸ்டர் அளித்த பேட்டியில் -

சச்சின் டெண்டுல்கரிடம் நேற்றுமுன்தினம் பேசினேன். காயம் நன்றாகக் குணமடைந்துவிட்டது என்று தெரிவித்தார். எதிர்வரும் 14 அல்லது 15ஆம் திகதி முதல் மீண்டும் பயிற்சி தொடங்கப் போகிறார். விரைவில் மீண்டும் அணிக்குத் திரும்புவார் என்றார்.



டப்ளின் நகரில் நடந்த உலகக் கிண்ண தகுதிகாண் உதைபந்தாட்டப் போட்டியில், பிரான்ஸ் வீரர்களின் தடுப்பு வளையத்தை மீறி, கோல் அடிக்க முயல்கிறார் அயர்லாந்து வீரர் அன்டி ரீட். இந்தப் போட்டியில் பிரான்ஸ் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


# அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி; பெடரர், ஹெவிட் அரையிறுதியில்




நியூயோர்க் —

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நேற்றுமுன் தினம் நடைபெற்றன.

இதில் ஒரு ஆட்டத்தில் உலகின் முதல்நிலை மற்றும் சுவிற்சர்லாந்து வீரரான ரோஜர் பெடரர், ஆஜென்ரீன வீரர் டேவிட் நல்பாண்டியனுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் பெடரர் 6-2, 6-4, 6-1 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.



மற்றொரு ஆட்டத்தில் லெய்டன் ஹெவிட் (அவுஸ்ரேலியா), பின்லாந்து வீரர் ஜாக்கோவை 2-6, 6-1, 3-




6, 6-3, 6-1 என்ற செட் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதியாட்டத்தில் மகேஷ் பூபதி (இந்தியா), டேனிலா ஹட்ச்னோவா (ஸ்லோவாக்கியா) ஜோடி, ஜிம்மோன்ஜிக் (சேர்பியா), கத்ரினா (சுலோவேனியா) ஜோடியை 6-4, 6-2 என்ற நேர் செட்டில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. மகேஷ் பூபதி கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெறுவது இது 8ஆவது முறையாகும்.

சித்திரக்கதை

# சாவி கொடுத்த சுண்டெலி




# முயலின் பரசூட்




1. பாபு முயல் கீழே குதி. உனக்கு கரட் கிழங்கு தாரன்.

2. மேலே இருந்து கீழே குதிப்பது மூடத்தனம் குடை கொண்டு கீழே இறங்கி வருகிறேன்.





# துருவன்



## உப்பா? சர்க்கரையா?

பாரசீகத்தை ஆண்ட சாஞ்ஜன் என்னும் மன்னரது அரசவையில் ரஷீத், பொகானி என்ற இரு பெரும் புலவர்கள் இருந்தனர்.

இந்தப் புலவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் காழ்ப்புணர்ச்சியைக் காட்டிக் கொள்வது வழக்கம்.

ஒரு நாள் பொகானியிடம் மன்னர் கேட்டார்.'ரஷீத் கவிதைகள் எப்படி?'

'எல்லாம் சரி. ஆனால் உப்பு போதாது', என்றார் பொகானி.

'ஆமாம். அவர் சொல்வது சரிதான். எனது கவிதை வரிகளில் சர்க்கரையும், தேனும் அதிகம். உப்பு இருந்தால் அதைக் கெடுத்து விடும். அதனால் தான் உப்பு இல்லை. ஆனால் பொகானியின் கவிதைகள் அழுகிய கத்தரிக்காய், முட்டைக் கோஸ் போன்றது. அது தெரியாமல் இருக்க வேண்டும் என்றால் நிறைய உப்புப் போட வேண்டும்', ரஷீத் தடாலடியாக ஒரு போடு போட்டார்.


## உதவி

விதை முளைக்க மரம் வளரும்
விதை மறைந்து போகுமே!
விதை மறைந்து போவதால்தான்
மரம் வளர லாகுமே!

மழைத்துளிகள் ஒன்று சேர
மா நதியும் தோன்றுமே!
மழைத்துளிகள் மறைந்து போகும்
மா நதியாய்த் தெரியுமே!

மெழுகுவர்த்தி எரிவதால் தான்
விளக்கின் ஒளி தோன்றுமே!
மெழுகுவர்த்தி மறையும் போது
வெளிச்சமாக மாறுமே!

தியாகம் செய்யும் பண்பினால் தான்
தினமும் அன்பு பெருகுமே!
தியாகம் என்றால் நமை மறந்து
பிறர்க்குதவி செய்வதே!



## பெரிய எதிரி

கோபம் ஒருவரது மிகப் பெரிய எதிரி. கோபத்தை இழப்பது நல்லது. முதலில் ஒரு நாளைக்கு ஒரு தரம் கோபப்படுங்கள். பின் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை. அதன்பின்னர் மூன்று நாட்களுக்கு ஒரு முறை...... அதன்பிறகு வாரம், மாதம் ஒரு முறை என விரிவுபடுத்துங்கள். சினம், கோபம் அடைவதில் கூட சீரான குறைவு வந்தாலும் நாம் இழப்பது ஒன்றுமில்லை. எனவே கோபத்தைக் குறைக்கப் பாருங்கள். -எப்பிக்டேடஸ்-




# உங்கள் கைவண்ணம்




ஆர்.பிரியங்கா
தரம் - 05
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



பு.சுமித்திரா
தரம் - 10
யா/குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்.



குருநாத்
தரம் - 06
யாழ்ப்பாணக் கல்லூரி.



அ.மக்லின்
தரம் - 07
யா/கலட்டி றோ.க.ஆ.பாடசாலை.



# மவோல்

சுனை நீரின் தெளிவைப் போன்ற கண்களும், இளவேனி லின் இன்பத்தைப் போன்ற இளநகையும் உடையவன் மவோல்.

பலமாக வீசும் காற்றுக்கூட இருபது வயதுள்ள அவனுடைய வேகத்தைவிடக் குறைந்ததுதான். அவன் ஓடினால், அந்தக் காற்றால் கூட அவனைப் பிடிக்கமுடியாது.

ஒருநாள் காலை நேரத்தில் வைக்கோல்கள் காயும் புல்வெளியில் அவன் நின்றுகொண்டிருந்தான். அவன் முடிகள் காற்றில் அலைபாய்ந்தன. கால்களில் காலணிகள் இல்லை. சிவப்பு அங்கி அணிந்த அவன் ஜூன் மாதத்தில் மணம் வீசும் காற்றைச் சுவாசித்து நுகர்ந்துகொண்டிருந்தான்.

திடீரென அங்கே ஒரு பூதம் வருவதைப் பார்த்தான். எப்படிப்பட்ட பூதம். அதனுடைய பெரிய, சிவந்து வட்டமாய் அகன்று இருந்த அந்தக் கண்ணிலிருந்து தீச் சுவாலைகள் வெளிவந்தன.

அது சிரிக்கும்போது ரத்தச் சிவப்பேறிய அதன் வாய் காதுகள் வரை வளர்ந்தது. அதன் தாடி மயிர்கள் துருப் பிடித்த முரட்டு இரும்புக் கம்பிகள் போலிருந்தன. குளிர்ந்த புல்வெளியில் இருந்த மவோல் ரத்தம் குடிக்கும் அந்தப் பூதத்தைக் கண்டான்.

பெருமூச்சுவிடும் டிராகன் மேல் அந்தப் பூதம் வந்தது. கெட்ட மணமடிக்கும் அந்தப் பெருமூச்சு, அங்கு பூத்திருந்த வாசனைச் செடிகளை வாடச் செய்தது.

பூதத்துக்கு எதிர்பாராத நல்ல வாய்ப்பு. சிவந்த கண்ணிலிருந்து ஒரு சுவாலையை வெளிவிட்டது. மெதுவாக நகரும் தன் ஊர்தியிலிருந்து இறங்கியது. ஒரே தாவலில் அது மவோலைப் பிடித்துவிடும்.

மவோல் அதை எதிர்பார்க்கவில்லை. உடனே அவன் வேகமாக ஓடத் தொடங்கினான். பூதம் அவனைத் தொடர்ந்து ஓடியது. அதைப் பார்க்கும்போது ஒரு கோட்டை பள்ளத்தாக்கின் வழியே ஓடுவது போலத் தோன்றியது. அதன் காலடியில் தரை நடுங்கியது. அதன் கால்கள் மண்வெட்டிகள் போல அகன்றிருந்தன.

'மவோல்! என்னிடமிருந்து நீ தப்பமுடியும் என்று நம்பாதே. அதோ எதிரே ஒரு ஆறு உள்ளது. உன் மிகுந்த அழகையும், கூர்மையான அறிவையும் கொண்டு என்ன செய்யப்போகிறாய்?' என்று உறுமியது பூதம்.

கண் இமைக்கும் நேரத்தில் ஆற்றங்கரையை அடைந்தான் மவோல். சிரித்துக்கொண்டே இளமானைப் போல ஒரே தாவலில் அடுத்த கரையை அடைந்தான். அவன் கால்கள் நனையவில்லை.

பருத்த பூதம் ஏமாற்றத்துடனும், பெரும் சினத்துடனும் கூச்சலிட்டுக்கொண்டு வருவதை அவன் கண்டான்.

ஆற்றங்கரையை அடைந்த பூதம் நின்றது.

'ஓ... நான் இந்தத் தெளிந்த நீரைக் கடந்து வரமாட்டேன் என்பதைத் தெரிந்து வைத்திருக்கிறாய்? என்னை நீ ஏமாற்றி விட்டாய்.'

'புரிந்து கொண்டாயா?'

'நீ எப்போது திரும்பி வருவாய்?'

'பருத்த பூதமே! அதைச் சொல்ல நான் அறிவில்லாதவன் அல்ல?'

'சூடான சிவந்த உன் இள ரத்தத்தை நான் குடிக்க வேண்டும். அது எனக்கு ஒரு திருவிழா. அதைத் தவற விடுவது



எனக்கு மிகவும் துன்பமானது. என் இடத்தில் நீ இருந்தால் என்ன செய்வாய்? சொல் பார்க்கலாம்!'

'அறிவற்ற பூதமே! உன்னிடத்தில் நான் இருந்தால் தெளிந்த இந்த நீரைக் குடித்து ஆற்றை வற்றிவிடச் செய்வேன்!'


'ஆமாம். அது உண்மைதான்! எனக்கும் அதிக தாகமாகத்தான் இருக்கிறது. இதோ குடித்துவிடுகிறேன்!' என்று சொன்னது பூதம்.

உடனே குனிந்து ஆற்று நீரைக் குடிக்கத் தொடங்கியது. குடிக்கக் குடிக்க அதன் வயிறு உப்பிக்கொண்டே வந்தது. கடைசியில் பெரும் சத்தத்துடன் பூதத்தின் வயிறு வெடித்தது.

## தெரிந்து கொள்ளுங்கள்

* கிவி பறவைக்கு இறகுகள் கிடையாது.
* கோழிக்குஞ்சு பிறக்கும்போது 8 ஆயிரம் சிறகுகள் இருக்கும்.
* கங்காருவின் குட்டிகள் பிறக்கும்போது 2.5 சென்றி மீற்றர்தான் இருக்கும். அதன் குட்டிகளுக்கு 'ஜோய்ஸ்' என்று பெயர்.
* நாய் பல நாட்கள்கூட உணவில்லாமல் வாழும். ஆனால் தூங்காமல் இருந்தால் இறந்துவிடும்.
* பனிச்சறுக்கு விளையாட்டில் மிகவும் புகழ்பெற்ற நாடுகள்; சுவிட்சர்லாந்து, இத்தாலி, சுவீடன், நோர்வே, பின்லாந்து.
* உயிருடன் வாழும் டைனோசர் எனப்படும் விலங்கு முதலையாகும்.
* இங்கிலாந்து நாடு – வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது.
* தாமரை இலையைப்போலவே, வாத்தின் முதுகிலும் தண்ணீர் ஒட்டாது.

பெற்றோல் நிரப்பு நிலையம் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தடுமாறும் சேகருக்கு நீங்களாவது வழி காண்பியுங்களேன்.



### விடைகள்

1. ஆந்தை
2. சகோதரியின் வயது 25
3. 1 - E, 2 - D, 3 - A, 4 - C, 5 - B

### 1. நான் யார்?


எனது அகன்ற கண்கள் போல வேறு எந்தப் பறவைக்கும் கிடையாது. அதே மாதிரி என் உருவத்துடன் ஒப்பிட்டால், என்னை விட மிகச்சிறிய மூளையுள்ள பறவை எதுவும் இல்லை. இரவு நேரத்தில் தான் நான் வேட்டையாடுவேன். நான் யார்?

### 2. சின்னக் கணக்குத்தான்:

5 வயது சந்துருவுக்கு அவனது வயதைப்போல மூன்று மடங்கு வயதுள்ள சகோதரி இருக்கிறாள். அப்படியென்றால், சந்துருவுக்கு 15 வயதாகும் போது அவனது சகோதரிக்கு எத்தனை வயதாகும்? சுலபமான கணக்குத்தான். எங்கே விடையைச் சொல்லுங்கள் பார்ப்போம்.


### 3. பொருத்துங்கள்

பிராணிகளையும், அவற்றின் வசிப்பிடங்களையும் சரியாகப் பொருத்துங்கள்.






## வர்ணந்தீட்டுங்கள். இந்த யானைகளில் ஒன்று வித்தியாசமானது. அது எந்த யானை?



## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................

கற்கும் பாடசாலை :........................

கற்கும் தரம் :........................

வீட்டு முகவரி :........................

பிறந்த திகதி :........................

ஆர்வமுள்ள துறைகள் :........................

........................ ........................

திகதி ஒப்பம்

........................ ........................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.


இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-


இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## நீங்களும் ஓவியம் வரையலாம்




# நடன பொம்மை

இது ஒரு மணிப்பூரி நடனப் பொம்மை. முதலாவது படத்தைக் கவனமாகப் பாருங்கள். இரண்டாவது படத்தில், Aயிலிருந்து Hவரையிலான படங்களை, 1 இலிருந்து, 8 வரையான இடத்தில் குறிப்பிடுங்கள்.




# சீடாப் புலி

இதோ உங்களுக்கான மகிழ்ச்சிகரமான விளையாட்டு. இந்தச் சீடாப் புலியைப்போல நான்கு புலிகள் வரையப்பட்டுள்ளன. அவற்றிலே சீடாப் புலியைப் போன்றது எது? கண்டுபிடியுங்கள்.






# அரசன் எழுதிய கவிதை

ஃபிரெஞ் மன்னர் பதின்நான்காம் லூயிக்கு கவிதை எழுத ஆசை வந்தது. அவைப் புலவர்கள் இருவர் அவருக்குப் பாட்டெழுதக் கற்பித்தனர்.

ஒருநாள் அவர் கவிதை ஒன்றை எழுதி முடித்தார். அதனை மீண்டும் வாசித்துப் பார்த்தபோது, அவருக்கே அது பிடிக்கவில்லை.

அப்போது அவர் படையின் உயர் அதிகாரி ஒருவர் அங்கு வந்தார். அரசர் தமது கவிதையை அவரிடம் கொடுத்தார்.

'இதைப் பாருங்கள், இதுபோன்ற ரசனைக் குறைவான கவிதை ஒன்றை நீங்கள் வாசித்திருக்கவே மாட்டீர்



கள். எனக்குக் கவிதைகள் பிடிக்கும் என்பதால் நினைப்பதை எல்லாம் கிறுக்கிக்கொண்டு வந்து கொடுக்கிறார்கள்!' - என்றார்.

கவிதையைப் படித்து முடித்தார் அதிகாரி.

'மன்னர் பெருமானே! மிகச் சரியாகச் சொன்னீர்கள். இவ்வளவு மோசமான கவிதையை நான் என் வாழ்நாளில் பார்த்ததே இல்லை!' - என்று கூறினார் அவர்.

அரசர் வாய்விட்டுச் சிரித்தார்.

'இதை எழுதியவர் பெரிய முட்டாள் அல்லவா?'

'அதைவிட வேறு பட்டம் கொடுக்க முடியாது அரசே!'

'நல்லது. உண்மை சொன்னதற்கு மகிழ்ச்சி. இதை எழுதியவர் நான்தான்!' என்று அரசர் கூறினார்.

அதைக் கேட்ட அதிகாரி திடுக்கிட்டார்.

'ஐயோ! அப்படியா? நான் இதை ஆழ்ந்து படிக்கவில்லை. மேலோட்டமாகத்தான் பார்த்தேன். அருள்கூர்ந்து கொடுங்கள் அரசே! மறுபடியும் படித்துப் பார்க்கிறேன்' - என்று பணிவோடு கேட்டார் அதிகாரி.

'வேண்டாம், வேண்டாம். முதலில் வெளியிடப்படும் கருத்தே எப்போதும் உண்மையானதும் - இயற்கையானதும் கூட' - என்று கூறினார் அரசர்.

# மகிழ்ச்சியும்... வருத்தமும்...

மாதவன் தன் குதிரை வண்டியில் பூக்களை ஏற்றிக்கொண்டு சந்தைக்குப் போனான். பூக்களின் நறுமணம் அந்த வழியில் சென்ற மக்களை எல்லாம் கவர்ந்தது. அவர்கள் பூக்களைப் புகழ்ந்து கதைத்துக்கொண்டு சென்றார்கள்.

குதிரை, அந்தப் புகழ்ச்சி எல்லாம் தனக்குத்தான் என்று எண்ணி மகிழ்ந்தது. பெருமிதத்துடன் தலையை உயர்த்தி நிமிர்ந்து நடந்தது.

மாதவன் பூக்களை விற்றுவிட்டு வீடு திரும்பினான். வழியில் ஓரிடத்தில் சாணம் குவியலாக இருந்தது. தான் வளர்க்கும் பூச்செடிகளுக்கு நல்ல எருவாகும் என்று எண்ணி, அந்தச் சாணக் குவியலை வண்டியில் ஏற்றிக்கொண்டு போனான்.

அந்தப் பக்கம் போன மக்களில் சிலர் மூக்கைப் பிடித்துக்கொண்டு சென்றார்கள்.



'சீச்சீ! என்ன நாற்றம். குடலைப் புரட்டுகிறதே' என்று கதைத்துக்கொண்டு போனார்கள் வேறு சிலர்.

அதைக் கேட்ட குதிரைக்கு நாணம் உண்டாயிற்று. வருத்தத்துடன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு வீட்டை அடைந்ததும் தன் நண்பனான மாட்டினிடம் கூறியது.

'பிறர் புகழ்ச்சிக்கு மகிழ்வதோ, இகழ்ச்சிக்கு வருந்துவதோ கூடாது! உன் திறமையை, உன் வேலையைக் கொண்டுதான் மதிப்பிடுவார்கள். நீ ஏற்றிச்செல்லும் பொருட்களை வைத்து அல்ல!' என்று குதிரைக்கு ஆறுதல் கூறியது மாடு.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

கொள்ளைக்கு எதிராக ஒருவனை வாழ வைப்பது, அவனைக் கொல்வதைவிடக் கொடுமையாகும். - மாண்டெயின் -

## நமது நோக்கு

### சர்வதேச சமாதான சமூகத்தின் சிந்தனைக்கு...

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையிலான தேர்தல் ஆதரவு உடன்பாடு நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டதன்மூலம் -ஜே.வி.பியினர் விதித்த 12 நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இயங்கும் ஒரு சுயதீமானமெடுக்கும ஒரு திறனற்ற - தான்சார்ந்த கட்சியின் சமகால கொள்கை நிலைப்பாட்டைப் புறமொதுக்கித் தள்ளிவிட்டுப் பதவிக கதிரையைக் கைப்பற்றும் ஒரே நோக்குடன் - தேசிய நலனுக்கு ஆபத்தையும், சமாதானச் சூழலுக்கு அச்சுறுததலையும் ஏற்படுத்தும் ஒரு நபராகத் தன்னைத் தெட்டத் தெளவாக இனங்காட்டியுள்ளார்.

ஜே.வி.பியினர் விதித்துள்ள 12 நிபந்தனைகளும் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளின் சகல பரிமாணங்களையும் நிராகரிப்பதுடன், இதுநாள்வரை அதாவது - பல்வேறு நெருககடிகளுக்கும், அழுத்தங்களுக்கும் மத்தியில் கடந்த மூன்றாண்டு காலமாகத் தொடரும் போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் செயற்பாடுகள் அனைத்தையும் அர்த்தமிழக்கவும் வைத்துள்ளது.

அலரி மாளிகையில் கைச்சாத்தான மகிந்த - ஜே.வி.பி உடனபாட்டை அடுத்து, அடுத்துவரும் நாட்களில் கண்டி தலதா மாளிகையில் ஹெல உறுமயவுக்கும் மகிந்தவுக்கும் இடையிலான உடன்பாடொன்றும் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இந்த உடன்பாட்டின் அடிப்படையில் ஹெல உறுமயவினர் விதிக்கவுள்ள 11 நிபந்தனைகளுக்குக் கட்டுப்படும் ஒருவராகவும் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தன்னை அடிமைப்படுத்திக் கொள்ளப்போகிறார் என்பது உண்மையே.

ஜே.வி.பியினரும், ஹெல உறுமயக்காரரும் மகிந்தவுக்கு ஆதரவை வழங்குவதற்காக விதித்துள்ள - மகிந்தவும் ஏற்றுக்கொண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் சிறுபான்மை சமூகத்தவரின் அடிப்படை மனித மற்றும் அரசியல் உரிமைகளுக்கு அச்சுறுத்தலானவை என்பதை விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

அதுமட்டுமல்ல, ஏற்கனவே ஐ.தே முன்னணியின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர்நிறுத்த உடனபாட்டின் அடிப்படையிலான அமைதிச் சூழலை ஆபததுக்குள்ளாக்கப்போவதுடன், மீண்டும் போர் வெடிக்கக் கூடிய அபாயத்தையும் தோற்றுவித்துள்ளது என்பதை சமகால அரச - இராணுவ நகர்வுகள் யாவும் உறுதிசெய்வதாகவே உள்ளன.

வெறும் பேச்சுக்கு... ஜே.வி.பியினருடனான உடன்படிக்கையின் காரணமாக மீண்டும் போர் வெடிக்காது என மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அறிக்கைகளை விடுத்தாலும் கூட - சமகால அரசியல் சூழலின் யதார்த்த நிலை அதற்கு முற்றிலும் முரணான நிலையையே விஸ்வரூபம் கொள்ளவைத்துவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உடன்பாடுகள் ஏற்படுத்திவரும் போர் குறித்த அச்சம் ஒருபுறம் - தற்போது அமுலில் இருக்கும் அவசரகால நிலைப் பிரகடனத்தால் உருவாகியுள்ள போர்க்காலக் கெடுபிடிச் சூழலின் அதிகரித்துவரும் அழுத்தம் இன்னொரு புறமென, நாடெங்கிலும் சிறுபான்மை மக்களின் குறிப்பாக தமிழ்பேசும் மக்களின் இயல்பு வாழ்வுக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும் ஏற்படுத்தியுள்ள அச்சுறுத்தலும், ஆபத்தும் சமாதானம் குறித்த சகல நம்பிக்கைகளையும் தகர்த்துள்ள நிலையில் போர்நிறுத்தத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டுள்ளது.


ஜே.வி.பியுடனான மகிந்த ராஜபக்ஷவின் உடன்பாடு குறித்து மௌனம் சாதிக்கும் அல்லது சமாளிக்க முனையும் ஜனாதிபதி - இன்றைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண கட்டுநாயக்கவில் பேச்சு நடத்தச் சம்மதித்திருப்பது ஒரு அர்த்தமற்ற கோமாளித்தனமான முடிவேயாகும்.

அப்படித்தான் பேச்சுக்களை நடத்தினாலும்கூட - அதில் ஆக்கபூர்வமாக முடிவெடுத்தாலும்கூட - அதனை அமுல்படுத்தும் வலுவுள்ள ஒருவராகத் தற்போது ஜனாதபதி இல்லையென்பதும் அவரது அஸ்தமன காலத்தை நெருங்கும் அதிகாரபலம், ஜே.வி.பியுடனான உடன்பாட்டின்மூலம் மகிந்த ராஜபக்ஷ அவர்களால் முற்றாக அர்த்தமற்றுப் போயுள்ள நிலையில், அவர் இனிமேல் மேற்கொள்ளப்போகும் சகல நடவடிக்கைகளினதும் ஆயுட்காலம் வெறும் இரண்டே மாத உயிர்ப்பு நிலையைக் கொண்டதாகவே இருக்கும் என்பதால் அதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

எனவே, சமாதான அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் இன்றைய இலங்கையின் அரசியல் யதார்ததச் சூழலையும் அது எதிர்காலத்தில் அவர்களின் அமைதிப் பணிகளில் ஏற்படுத்தப்போகும் தாக்கத்தையும், அடுத்துவரும் மாதங்களில் ஏற்படப்போகும் ஆட்சித் தலைமை எடுக்கப்போகும் சமாதானம் தொடர்பான நிலைபாடுகளையும் - இதன் காரணமாக தமிழ்பேசும் மக்கள் எதிர்கொள்ளப்போகும் அபாயங்கள் குறித்தும் தொலைநோக்குச் சிந்தனையுடன் ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதும் தவிர்க்கமுடியாத விடயமேயாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# சந்திரிகாவா - மஹிந்தவா - அரசா புலிகளா - யார் கொலோ சதுரர்?

தந்ததுன்தனை கொண்டதென்தனை சங்கரா யார் கொலோசதுரர் என்று பாடிக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன மணிவாசகருடன் வருகிறீர்? என்று கேட்டேன்.

எல்லா இடங்களிலும் இப்போ நீயா நானா? என்ற முறையில்தான் சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதைத்தான் மணிவாசகர்மீது பழியைப் போட்டுச் சொல்லவந்தேன் என்றார் பரமசிவம்.

எதைச் சொல்கிறீர் என்று கேட்டேன். தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடற்கோள் அனர்த்தத்தினால் தமிழ், முஸ்லிம் மக்கள் வேறு எந்தப் பகுதிகளையும்விட மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இன்னும் இந்த மக்கள் கூடாரங்களிலும், கொட்டில்களிலும் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றனர். அல்லல்பட்ட இந்த மக்களுக்கு உதவி செய்வதற்காக வெளிநாடுகள் பலவும் மனம் இரங்கி நிவாரணம் வழங்கின. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவற்றைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு ஒரு பொதுக்கட்டமைப்பை அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து அமைக்கலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரே யோசனை சொன்னார். விடுதலைப் புலிகளும் இதற்கு இணங்கினர். இது சம்பந்தமாக இருதரப்பும் பேச்சுவார்த்தைகளும் நடத்தினர். திடீரென்று ஆட்சியில் அங்கம்வகித்த ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்பு அமைக்கக்கூடாதென்று கூச்சல் போட்டது. புத்தபிக்குகளும் அவர்களது ஹெல உறுமயவும் இதில் சேர்ந்துகொண்டு கோரஸ் பாடத் தொடங்கின. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்காக அமைக்கப்படும் பொதுக்கட்டமைப்பு- நாட்டைப் பிரித்துப் புலிகளிடம் கொடுத்துவிடும் என்று ஒப்பாரி வைத்தனர்.

உண்மை நிலையை உணர்ந்த வெளிநாடுகள் சந்திரிகா அம்மையாருக்கு பொதுக்கட்டமைப்பு அமைக்கச் சொல்லி அழுத்தம் கொடுத்தன. ஆனாலும், ஜே.வி.பியும், பிக்குகளும் பேரினவாதிகளும் விட்டுக்கொடுக்க மறுத்தனர். இந்தநிலையில், கண்டியில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடந்தது. ஐம்பது நாடுகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டன. சந்திரிகா அம்மையார் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் முன்னிலையில் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என்று துணிந்து அறிவித்தார். என் உயிர் போனாலும் இது அமைக்கப்படும் என்று அறிவித்தார். இதனால், ஜே.வி.பி. கூட்டாட்சியிலிருந்து வெளியேற நேர்ந்தது. தங்களின் மிரட்டல்களுக்கு அம்மையார் பணிந்துவிடுவாரென்று எதிர்பார்த்த ஜே.வி.பி. அம்மையாரின் கூட்டாட்சியிலிருந்து வெளியேறுவதைத் தவிர, வேறு வழியில்லாமல் போய்விட்டது. இப்பொழுது ஜனாதிபதி தேர்தலில் அம்மையாரும், அவரது கட்சியும் சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை வேட்பாளராக நிறுத்தியிருக்கின்றனர்.

அம்மையார் வெளிநாடு சென்றிருந்த சமயத்தில் ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி. பேச்சு நடத்தியது. ஜனாதிபதி தேர்தலில் அவரின் வெற்றிக்காக உழைப்பதற்கு முன்வந்தது. பன்னிரண்டு அம்ச நிபந்தனைகளையும் அது முன்வைத்தது. மகிந்த ராஜபக்ஷவும் இந்த நிபந்தனைகளுக்குச் சம்மதித்து ஒப்பமிட்டிருக்கிறார். ஜே.வி.பியுடன் பேச்சு நடத்துவதற்கும் அம்மையார் சம்மதித்திருந்தாராம். இந்தப் பன்னிரண்டு அம்ச நிபந்தனைகளில் வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் மக்களுக்கு கடற்கோளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பங்கிட்டுக் கொடுக்க அமைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பை கலைத்துவிடுவதும் ஒன்றாகும். அதாவது ஜே.வி.பியின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது வெளிநாட்டுப் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே வாக்குறுதியளித்தபடி சந்திரிகா அம்மையார் அமைத்த பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவானதும், கலைத்துவிடுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

தங்கள் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஜனாதிபதி சந்திரிகா அமைத்த பொதுக்கட்டமைப்பை சந்திரிகாவுக்குப் பின் அவர் தேர்தலில் நிறுத்திய மகிந்த ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாக வந்ததும், இல்லாமல் செய்துவிடுவது என்பதுதான் ஜே.வி.பியின் திட்டம் என்று சொல்லுகிறீர் என்றேன்.

மகிந்தவுக்கு 12 நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்க ஜே.வி.பி உடன்படிக்கை செய்திருக்கிறது. இதேசமயம், ஜே.வி.பி தனது கணவன் உட்பட ஐம்பதாயிரம் மக்களைக் கொன்று குவித்தது என்று ஒரு நிகழ்ச்சியில் சந்திரிகா அம்மையார் குற்றம்சாட்டிப் பேசியதாக ஒரு வானொலிச் செய்தியில் ஒலிபரப்பப்பட்டதையும் மக்கள் கேட்டனர் என்றும் நான் சொன்னேன்.

அதாவது நீயா, நானா இன்னும் தெளிவாகச் சொன்னால் மணிவாசகரின் வார்த்தையில் யார் கொலோ சதுரர் என்ற மாதிரி ஜே.வி.பியா? சந்திரிகாவா வெற்றி பெற்றவர் என்பதுதான் கேள்வி என்றார் பரமசிவம்.

வேறு இடங்களிலும் இதே கேள்வியிருப்பதாகச் சொன்னீரே என்றேன்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் சம்பந்தமாகவும், சமாதான முயற்சிகள் சம்பந்தமாகவும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தேறியிருக்கின்றன. முதலில் இந்தியாவில் நடத்துவதற்கும் அது முடியவில்லையானால், பாலசிங்கம் இந்தியாவின் ஒரு நகரில் சில தினங்கள் தங்கியிருந்து பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு இடம் தரும்படியும் கேட்கப்பட்டது. இந்தியா மறுத்துவிட்டது. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நோர்வேயின் தலைநகரிலும், வேறு வெளிநாடுகளிலும் அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து, சமாதான முயற்சி சம்பந்தமாக சட்ட வல்லுநர்களையும், வெளிநாட்டுத் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவதற்கும் தடையிருக்கவில்லை.

இப்பொழுது போர்நிறுத்த உடன்படிக்கைக்கே ஆபத்து வந்துள்ள இந்தச் சமயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் விருப்பத்தின்பேரில் இருதரப்பும் சந்தித்துப் பேசுவதற்குச் சம்மதித்திருக்கின்றன. ஆனால், எங்கே சந்திப்பது என்பது இப்போது புதிதாகப் பிரச்சினையாக்கப்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கு அரசும் சம்மதித்திருக்கிறது. விடுதலைப் புலிகளும் இணங்கியிருக்கிறார்கள். உள்நாட்டில்தான் இந்தச் சந்திப்பும், பேச்சும் நடைபெறவேண்டுமென்று யாரோ, எந்தக் கட்சியோ, ஊடகமோ சொல்லிவிட்டதற்காக வெளிநாட்டில் போய்ப் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள்.

வெளிநாட்டில் போய்ப்பேசுவதால் விடுதலைப் புலிகளுக்குப் பிரசாரம் செய்யவசதியாம். இவ்வளவு பலவீனமாகவா அரசு இருக்கிறது? அதாவது விடுதலைப் புலிகளின் பக்கம் நியாயமிருக்கிறதென்பதை வெளிநாடுகள் அறிந்துகொள்ள வாய்ப்பாகிவிடுமென்று அவர்கள் அஞ்சுகிறார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

வெளிநாடுகளில் அரசுப் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் சந்தித்துப் பேசுவதைத் தடுக்கவேண்டுமென்று சொல்லித் தடுக்க முயல்வது விடுதலைப் புலிகள் பக்கம் அதாவது தமிழ் மக்கள் பக்கம் நியாயமிருப்பதை எடுத்துக்காட்டுகிறதே என்றேன். பேச்சுவார்த்தை எப்படிப்பட்ட சூழ்லில் இயல்பாக நடைபெறமுடியும், எப்படி நடைபெறவேண்டும் என்பதை தமிழ்ச்செல்வன் நன்கு உறைக்கக்கூடியதாகச் சொல்லியிருக்கிறார்.

இதைத்தான் நான் யார் கொலோ சதுரர் என்று இந்த விடயத்துக்கும் மணிவாசகரை இழுத்துவந்தேன் என்று நடந்தார் பரமசிவம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.

பிரதேச ரீதியாகத் தெரிவானோரின் விபரம் வருமாறு:

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு
## மூப்பு அடிப்படையில் தெரிவானோர்

நேற்றைய தொடர்ச்சி....

60 யா/கா/492 திரு. கதிரவேலு தில்லையம்பலம்
61 யா/கா/496 திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
62 யா/கா/497 திருமதி.அலிஸ்நாகம்மா பெஞ்சமின்
63 யா/கா/498 திருமதி. லீலாவதி முருகேசு
64 யா/கா/504 திருமதி. நாகம்மா பொன்னம்பலம்
65 யா/கா/534 திரு. ஆறுமுகம் இராஜகோபால்
66 யா/கா/535 திரு. கந்தையா நடராசா
67 யா/கா/538 திரு. அம்பலவாணர் கனகசபை
68 யா/கா/558 திரு. கயிலாசபிள்ளை சடாட்சரம்
69 யா/கா/567 திரு.கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்
70 யா/கா/568 திருமதி. பாலாமணி கந்தசாமி
71 யா/கா/571 திருமதி. பரமேஸ்வரி இராசையா
72 யா/கா/578 திரு. நமசிவாயம் நடராசா
73 யா/கா/586 திரு. வேலுப்பிள்ளை கதிரவேலு
74 யா/கா/602 திரு. சுப்ரமணியம் தம்பிப்பிள்ளை
75 யா/கா/604 திரு. ஆறுமுகம் கோவிந்தபிள்ளை
76 யா/கா/610 திருமதி. மகேஸ்வரி நமசிவாயம்
77 யா/கா/612 திருமதி.யோகாம்பிகை கணேஷபிள்ளை
78 யா/கா/634 திரு. கதிர்காமு திருனானந்தம்
79 யா/கா/642 திரு.வெற்றிவேலு குலசேகரம்பிள்ளை
80 யா/கா/661 திருமதி. மகேஸ்வரி நீலகண்டர்
81 யா/கா/663 திரு. செல்லப்பா மாணிக்கவாசகர்
82 யா/கா/668 திருமதி. கனகாம்பிகை பேரம்பலம்
83 யா/கா/684 திரு.முத்துக்குமாரு தெட்சனாமூர்த்தி
84 யா/கா/692 திரு. குமாரசாமிஐயர் அமிர்தேஸ்வரசர்மா
85 யா/கா/694 திரு. சுப்பிரமணியம் முருகேசு
86 யா/கா/696 திருமதி. பரமேஸ்வரி நல்லையா
87 யா/கா/698 திருமதி. மகேஸ்வரி நடராசா
88 யா/கா/701 திரு. குமாரவேலு கதிரவேலு
89 யா/கா/704 திரு. வேலன் ஆறுமுகம்
90 யா/கா/705 திரு. கந்தையா நல்லையா
91 யா/கா/724 திரு. மெல்கம் ஜெமினி சுரேந்திரா
92 யா/கா/744 திரு. சதாசிவம் சண்முகம்
93 யா/கா/748 திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
94 யா/கா/749 திரு. துரையப்பா கார்த்திகேசு
95 யா/கா/764 திரு. சண்முகம் இராமுப்பிள்ளை
96 யா/கா/776 திரு. நமசிவாயம் குமாரசாமி
97 யா/கா/780 திரு. கந்தப்பு சிவசம்பு
98 யா/கா/790 திருமதி. கிறேஸ்அழகம்மா ஜெயராசசிங்கம்
99 யா/கா/791 திரு. நாகலிங்கம் கணேசு
100 யா/கா/793 திரு. முருகேசு சிவஞானரத்தினம்
101 யா/கா/798 திருமதி. இராசமீனாட்சி பொன்னுத்துரை
102 யா/கா/812 திரு. கந்தன் கார்த்திகேசு
103 யா/கா/822 திருமதி.அன்னலட்சுமி ஐயம்பிள்ளை
104 யா/கா/831 திரு. தம்பிமுத்து செல்லையா
105 யா/கா/849 திருமதி. சிவகாமிப்பிள்ளை ஆறுமுகம்
106 யா/கா/855 திரு. கந்தையா ஆறுமுகம்
107 யா/கா/863 திரு. சிவசம்பு சிவநேசன்
108 யா/கா/866 திரு. பரமன் திருநாவுக்கரசு
109 யா/கா/874 திரு. தாமோதரம்பிள்ளை செல்லத்துரை
110 யா/கா/910 திரு. கந்தையா அழகசுந்தரம்
111 யா/கா/912 திரு. சுப்பிரமணியம் அருளம்பலம்
112 யா/கா/919 திரு. வேலுப்பிள்ளை நடராசா
113 யா/கா/930 திருமதி.பூரணம் இலட்சுமணப்பிள்ளை
114 யா/கா/937 திருமதி.அன்னமுத்து கணேசபிள்ளை
115 யா/கா/941 திரு. கந்தையா மகாதேவன்
116 யா/கா/967 திருமதி. பராசக்தி கந்தையா
117 யா/கா/968 திருமதி. செல்லம்மா ஆறுமுகம்
118 யா/கா/970 திரு. செல்லையா மாணிக்கவாசகர்
119 யா/கா/973 திருமதி. செல்லம்மா தம்பிராசா
120 யா/கா/982 திருமதி. அபிராமிப்பிள்ளை சுப்பிரமணியம்
121 யா/கா/997 திரு. கந்தையா தம்பிராசா
122 யா/கா/1004 திரு. சுப்பிரமணியம் இரத்தினம்
123 யா/கா/1010 திரு. அப்புக்குட்டி அரியரத்தினம்
124 யா/கா/1047 திரு. முருகுப்பிள்ளை கந்தையா
125 யா/கா/1061 திரு. அரியகுட்டி இராசையா
126 யா/கா/1067 திரு. கந்தையா நாகமணி
127 யா/கா/1085 திரு. ஆறுமுகம் நமசிவாயம்
128 யா/கா/1097 திரு. நல்லதம்பி வேலுப்பிள்ளை
129 யா/கா/1103 திரு. சிதம்பரப்பிள்ளை நடராசா
130 யா/கா/1109 திருமதி. மகேஸ்வரி ஆறுமுகம்
131 யா/கா/1130 திருமதி. சரஸ்வதி காசிநாதர்
132 யா/கா/1134 திரு. பொன்னம்பலம் பாலசிங்கம்
133 யா/கா/1137 திருமதி. கதிராசி முருகேசு
134 யா/கா/1152 திரு. கந்தையா துரைச்சாமி
135 யா/கா/1154 திருமதி. விசாலட்சி சுப்பிரமணியம்
136 யா/கா/1159 திரு.கா.சின்னத்தம்பி செல்லத்துரை
137 யா/கா/1165 திருமதி.கண்ணகையம்மா தம்பையா
138 யா/கா/1168 திரு. கனகசபை பாலசுப்பிரமணியம்
139 யா/கா/1173 திருமதி. கோமளவல்லி நடராஜா
140 யா/கா/1176 திரு. முருகேசு தியாகராஜா
141 யா/கா/1178 திரு. கார்த்திகேசு சிவஞானசுந்தரம்
142 யா/கா/1196 திருமதி. சின்னம்மா முருகேசு
143 யா/கா/1219 திருமதி. சின்னம்மா சுப்பிரமணியம்
144 யா/கா/1225 திருமதி.செல்லம்மா கணபதிப்பிள்ளை
145 யா/கா/1235 திரு. வேலன் ஐயம்பிள்ளை
146 யா/கா/1240 திரு. கந்தையா நாராயணசாமி
147 யா/கா/1245 திரு. கதிரவேலு கணபதிப்பிள்ளை
148 யா/கா/1256 திருமதி. பூரணம் வேலுப்பிள்ளை
149 யா/கா/1258 திருமதி. சௌந்தராம்பிகா திருச்சிற்றம்பலம்
150 யா/கா/1259 திரு. செல்லத்துரை துரைராசா
151 யா/கா/1278 திருமதி. சவுந்தராம்பிகை வயித்திலிங்கம்
152 யா/கா/1285 திரு. வயிரமுத்து நல்லதம்பி
153 யா/கா/1307 திருமதி. நாகம்மா பரமநாதன்
154 யா/கா/1309 திரு. பேரம்பலம் கணவதிப்பிள்ளை
155 யா/கா/1311 திரு. கந்தையா நல்லதம்பி
156 யா/கா/1313 திரு. அப்புக்குட்டி மார்க்கண்டு
157 யா/கா/1319 திரு. கந்தர் பரதராசா

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு
## குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

1 யா/கா/84 திரு. நமசிவாயம் சிவகுமாரன்
2 யா/கா/129 திருமதி. அம்மணி தேவராசா
3 யா/கா/339 திரு.சுப்பிரமணியம் திருஞானசம்பந்தன
4 யா/கா/464 திரு. ஐயன் செல்லத்துரை
5 யா/கா/510 திரு. விஸ்வநாதஐயர் ஜெகதீசன்
6 யா/கா/720 திரு.மயில்வாகனம் இரத்தினசிங்கம்
7 யா/கா/837 திரு. கணபதிப்பிள்ளை நாகராஜா
8 யா/கா/928 திருமதி.தவமணி தெய்வநாயகம்பிள்ளை
9 யா/கா/945 திரு. சின்னையா அருளம்பலம்
10 யா/கா/999 திரு. நவரத்தினம் கந்தையா
11 யா/கா/1018 திருமதி. சறோஜினிதேவி விக்னேஸ்வரன்
12 யா/கா/1065 திருமதி. சிவபாக்கியம் நடராசா
13 யா/கா/1147 திருமதி. சறோஜினி மகேந்திரம்

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு
## மூப்பு அடிப்படையில் தெரிவானோர்

1 யா/க/4 திருமதி. தங்கம்மா பஞ்சரட்சரம்
2 யா/க/18 திரு. வேலுப்பிள்ளை கனகசபை
3 யா/க/24 திருமதி. தங்கம்மா வேலுப்பிள்ளை
4 யா/க/49 திரு. ஐயாத்துரை மார்க்கண்டு
5 யா/க/56 திரு. சின்னையா மயில்வாகனம்
6 யா/க/64 திருமதி. செல்லம்மா சிவப்பிரகாசம்
7 யா/க/66 திருமதி.சிவக்கொழுந்து சுப்பிரமணியம்
8 யா/க/77 திரு. ஆழ்வாப்பிள்ளை வீரகத்தி
9 யா/க/89 திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம்
10 யா/க/92 திரு.கணபதிப்பிள்ளை பொன்னையா
11 யா/க/105 திருமதி. கனகம்மா வல்லிபுரம்
12 யா/க/110 திரு. சித்தர் வீரசிங்கம்
13 யா/க/111 திரு.வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம்
14 யா/க/117 திரு. ஆறுமுகம் கந்தையா
15 யா/க/118 திரு. கணபதி சிதம்பரப்பிள்ளை
16 யா/க/119 திருமதி. இலட்சுமிப்பிள்ளை சடாரணமூர்த்தி
17 யா/க/130 திரு. சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலம்
18 யா/க/142 திரு. கணபதிப்பிள்ளை செந்தியா
19 யா/க/155 திருமதி.பொன்னம்மா பொன்னம்பலம
20 யா/க/156 திரு. கந்தையா இரத்தினசிங்கம்
21 யா/க/166 திரு. முருகேசு கந்தப்பு
22 யா/க/170 திரு. புதியார் கிருஷ்ணபிள்ளை
23 யா/க/178 திருமதி. பாறுபதி செல்லத்துரை
24 யா/க/191 திரு. கந்தன் கிட்டிணன்
25 யா/க/197 திருமதி. தங்கம்மா செவ்வந்திநாதன்
26 யா/க/204 திரு. தம்பையா துரைராசா
27 யா/க/214 திரு. சின்னக்குட்டி நல்லதம்பி
28 யா/க/227 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
29 யா/க/235 திரு. வேலன் கந்தன்
30 யா/க/243 திரு. பழனியர் அமிர்தலிங்கம்
31 யா/க/277 திருமதி. இலட்சுமி ஆறுமுகம்
32 யா/க/279 திரு. முருகேசு ஸ்ரீபத்மநாதன்
33 யா/க/283 திரு. கிறிஸ்தோபர் ஞானப்பிரகாசம்
34 யா/க/292 திருமதி. இலட்சமிப்பிள்ளை சின்னத்துரை
35 யா/க/293 திரு. ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை
36 யா/க/297 திரு. முருகேசு தியாகராஜ்
37 யா/க/298 திரு. சரவணமுத்து தாமோதரம்
38 யா/க/320 திரு. சிலம்பு வீரகத்தி
39 யா/க/353 திருமதி. சின்னம்மா சின்னத்தம்பி
40 யா/க/363 திருமதி. இராசம்மா சண்முகம்
41 யா/க/379 திருமதி. செல்லம்மா சுந்தரம்
42 யா/க/412 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
43 யா/க/413 திருமதி. மகேஸ்வரி சபாபதி
44 யா/க/430 திருமதி. பொன்னம்மா கந்தப்பு
45 யா/க/433 திருமதி. சிவக்கொழுந்து கந்தையா
46 யா/க/435 திருமதி. சிவக்கொழுந்து கந்தையா
47 யா/க/456 திருமதி. சீதேவி வேலன்
48 யா/க/462 திருமதி. வள்ளியம்மை வேலுப்பிள்ளை
49 யா/க/463 திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பு
50 யா/க/482 திருமதி. இலட்சுமிப்பிள்ளை குணரத்தினம்
51 யா/க/536 திரு. கந்தப்பு குமாரசாமி
52 யா/க/546 திருமதி. மரியமுத்து அந்தோனி
53 யா/க/558 திரு. சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை
54 யா/க/562 திருமதி. இலட்சுமி பஞ்சநாதன்
55 யா/க/563 திரு. சின்னவன் வடிவேலு
56 யா/க/582 திரு. வீரகத்தி சிற்றம்பலம்
57 யா/க/604 திருமதி. மாணிக்கம் சிவஞானம்
58 யா/க/613 திரு. சின்னத்தம்பி தங்கராசா
59 யா/க/614 திரு. ஆழ்வாப்பிள்ளை சதாசிவம்
60 யா/க/621 திரு. தம்பையா முத்தையா
61 யா/க/625 திருமதி. அம்பிகை துரை
62 யா/க/640 திரு. உலகப்பர் மூத்ததம்பி
63 யா/க/643 திருமதி.இலட்சுமிப்பிள்ளை வேலுப்பிள்ளை
64 யா/க/649 திரு. வேலுப்பிள்ளை தியாகராசா
65 யா/க/656 திருமதி. சுகிர்தம்மா சரவணமுத்து
66 யா/க/667 திரு. இராமநாதர் மயில்வாகனம்
67 யா/க/670 திருமதி. வள்ளி ஆழ்வார்
68 யா/க/683 திரு. கந்தசாமி தர்மராஜா
69 யா/க/684 திரு. சிங்காரவேலு சுந்தரம்பிள்ளை
70 யா/க/687 திரு. ஆழ்வார் சிதம்பரப்பிள்ளை
71 யா/க/698 திருமதி.பரமேஸ்வரி சிவபாதசுந்தரம்
72 யா/க/705 திரு. சிவம்பு சுந்தரம்
73 யா/க/708 திரு. க.சின்னத்தம்பி சிதம்பரநாதன்
74 யா/க/714 திரு. சின்னையா கந்தசாமி
75 யா/க/720 திரு.கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
76 யா/க/723 திருமதி. அழகேஸ்வரி அருளையா
77 யா/க/749 திரு. முருகர் செல்லப்பாக்கியம்
78 யா/க/750 திரு. தம்பாப்பிள்ளை ஆறுமுகம்
79 யா/க/752 திரு. நீலக்குட்டி முத்துக்குமாரு
80 யா/க/768 திரு. சின்னத்தம்பி தங்கராசா
81 யா/க/779 திருமதி. சிவமலர் கந்தசாமி
82 யா/க/786 திருமதி.பத்தினிப்பிள்ளை சின்னத்தம்பி
83 யா/க/787 திருமதி.குஞ்சுப்பிள்ளை சின்னையா
84 யா/க/789 திரு. முருகேசு மயில்வாகனம்
85 யா/க/796 திரு. கந்தையா முருகேசு
86 யா/க/801 திரு. தாமு சின்னத்தம்பி
87 யா/க/820 திருமதி. இலட்சுமி கிருஷ்ணன்
88 யா/க/821 திருமதி. புவனேஸ்வரிஅம்மா சபாரத்தினக்குருக்கள்
89 யா/க/825 திரு. சிதம்பரி இரத்தினம்
90 யா/க/832 திருமதி. திலகவதி வினாயகமூர்த்தி
91 யா/க/847 திரு. சிற்றம்பலம் செல்லத்துரை
92 யா/க/854 திரு. சின்னத்தம்பி முருகேசு
93 யா/க/855 திரு. சின்னத்தம்பி முருகேசு
94 யா/க/864 திரு. திருஞானசம்பந்தமூர்த்தி சிவலோகநாதன்
95 யா/க/872 திரு. தம்பையா வேலாயுதம்
96 யா/க/876 திருமதி.சிவக்கொழுந்து மார்க்கண்டு
97 யா/க/883 திரு. நல்லதம்பி கனகசபை
98 யா/க/884 திரு. நல்லதம்பி கனகசபை
99 யா/க/887 திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம்
100 யா/க/888 திருமதி. இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி
101 யா/க/911 திரு. கனகசபை ஆறுமுகம்
102 யா/க/923 திரு. கந்தையா பழனிப்பிள்ளை
103 யா/க/928 திரு. கதிர்காமு முருகேசு
104 யா/க/945 திரு. சின்னையா சிவானந்தம்
105 யா/க/947 திருமதி. செல்லம்மா தம்பிப்பிள்ளை
106 யா/க/961 திருமதி. இலட்சுமிஅம்மா தெட்சணாமூர்த்தி ஐயர்
107 யா/க/979 திரு. சூரிப்பிள்ளை வைரமுத்து
108 யா/க/987 திரு. கந்தையா கதிர்காமு
109 யா/க/991 திரு. சின்னையா கிருஷ்ணபிள்ளை
110 யா/க/997 திருமதி. பரமேஸ்வரி வல்லிபுரம்
111 யா/க/998 திரு. கனகசபை செல்வராசா
112 யா/க/1000 திருமதி.சிவயோகம் திருஞானசுந்தரம்
113 யா/க/1006 திரு. ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரை
114 யா/க/1020 திரு. கந்தர் வேலாயுதம்
115 யா/க/1023 திரு. அப்பபையா கணபதிப்பிள்ளை
116 யா/க/1026 திரு. சின்னையா துரைச்சாமி
117 யா/க/1054 திருமதி. பத்தினிப்பிள்ளை சிவபாதசுந்தரம்
118 யா/க/1060 செல்வி. சசிமதி சிவானந்தன்
119 யா/க/1070 திரு. கந்தப்பு தியாகராசா
120 யா/க/1072 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
121 யா/க/1087 திரு. சின்னப்பா தணிகாசலம்
122 யா/க/1095 திருமதி.சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை
123 யா/க/1098 திருமதி. மனோரஞ்சிதம் தவசீலன்
124 யா/க/1105 திரு.அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை
125 யா/க/1113 திரு. சண்முகம் செல்லையா
126 யா/க/1115 திருமதி. சின்னத்தங்கம் வைரமுத்து
127 யா/க/1123 திரு. கந்தர் ஆழ்வாப்பிள்ளை
128 யா/க/1125 திருமதி.இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்
129 யா/க/1126 திருமதி. மனோன்மணி செல்வராசா
130 யா/க/1137 திருமதி.சிவதேவரத்தினம் தவபாலசிங்கம்
131 யா/க/1145 திரு. பொன்னுச்சாமிகுருக்கள் சிவராசசர்மா
132 யா/க/1153 திரு. வல்லிபுரம் செல்லையா
133 யா/க/1175 திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
134 யா/க/1183 திரு. கனகசபை பத்மநாதன்
135 யா/க/1186 திருமதி. இராசம்மா முருகேசு
136 யா/க/1202 திரு. சின்னத்தம்பி முருகன்
137 யா/க/1207 திருமதி. சின்னப்பிள்ளை கிட்டிணபிள்ளை
138 யா/க/1209 திருமதி. இராசமணி சிவலிங்கம்
139 யா/க/1218 திருமதி.நாகேஸ்வரி சிவபாதசுந்தரம்
140 யா/க/1257 திரு. நல்லதம்பி முருகேசு
141 யா/க/1277 திரு. இராசன் விஜயரத்தினம்
142 யா/க/1282 திருமதி. இரத்தினம செல்லத்துரை
143 யா/க/1283 திருமதி. தங்கமணி வைரமுத்து
144 யா/க/1287 திரு. ஆறுமுகம் இராசரத்தினம்
145 யா/க/1300 திரு. ஆறுமுகம் இராசரத்தினம்
146 யா/க/1307 திரு. இராசையா குலசிங்கம்
147 யா/க/1320 திரு. காசிப்பிள்ளை கந்தசாமி
148 யா/க/1321 திருமதி. தங்கமுத்து கந்தசாமி
149 யா/க/1325 திரு. கணபதிப்பிள்ளை கந்தவனம்
150 யா/க/1348 திரு. ஆறுமுகம் கதிரவேல்
151 யா/க/1363 திரு. சுப்பர் கணபதிப்பிள்ளை
152 யா/க/1367 திருமதி. இராஜேஸ்வரி புலேந்திரா
153 யா/க/1369 திரு. வடிவேலு மகேஸ்வரன்
154 யா/க/1372 திரு. சிவகுரு வேலும்மயிலும்
155 யா/க/1384 திரு.திருநாவுக்கரசு பொன்னுத்துரை
156 யா/க/1395 திரு. கதிர்காமு கிருஷ்ணபிள்ளை
157 யா/க/1396 திருமதி. குஞ்சியார் கந்தசாமி
158 யா/க/1404 திரு. தம்பிப்பிள்ளை துரைராஜா
159 யா/க/1410 திரு. தங்கராஜா ரமணன்
160 யா/க/1422 திருமதி. மாணிக்கம் பொன்னையா
161 யா/க/1423 திருமதி. மாணிக்கம் பொன்னையா
162 யா/க/1425 திரு. நடராசா கனகசிங்கம்
163 யா/க/1441 திரு. குமாரவேலு நடராசா
164 யா/க/1446 திரு. கந்தையா நமசிவாயம்
165 யா/க/1453 திருமதி. பொன்னம்மா சண்முகராசா
166 யா/க/1461 திரு. தாமு வீரசிங்கம்
167 யா/க/1462 திருமதி. அன்னபாக்கியம் கோபாலு
168 யா/க/1484 திரு. சின்னத்தம்பி வேலாயுதம்
169 யா/க/1492 திரு. அருணாசலம் திருநாவுக்கரசு
170 யா/க/1498 திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை
171 யா/க/1501 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
172 யா/க/1502 திரு. ஆழ்வார் மயில்வாகனம்
173 யா/க/1505 திரு. சின்னத்தம்பி முத்தையா
174 யா/க/1507 திரு. சின்னயைா இராசமசாமி
175 யா/க/1518 திரு.வேலுப்பிள்ளை சண்முகசுந்தரம்
176 யா/க/1526 திரு.பொன்னம்மா கணபதிப்பிள்ளை
177 யா/க/1543 திரு. வேலுப்பிள்ளை தங்கராஜா
178 யா/க/1556 திருமதி.இராசம்மா தாமோதரம்பிள்ளை
179 யா/க/1560 திரு. சரவனமுத்து செல்வநாயகம்
180 யா/க/1581 திரு. செல்லையா இராஜா
181 யா/க/1588 திரு. சின்னையா கந்தையா
182 யா/க/1597 திருமதி.புவனேஸ்வரி சுப்பிரமணியம்
183 யா/க/1604 திருமதி. வள்ளிநாச்சி கந்தவனம்
184 யா/க/1610 திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம்
185 யா/க/1611 திரு. கந்தையா முத்துலிங்கம்
186 யா/க/1619 திருமதி. நாகம்மா மாணிக்கம்
187 யா/க/1621 திருமதி. சரஸ்வதி சிதம்பரநாதன்
188 யா/க/1631 திருமதி. சரஸ்வதி கதிரேசு
189 யா/க/1648 திரு. வினாசித்தம்பி செல்வநாயகம்
190 யா/க/1651 திருமதி. செல்லம்மா சின்னையா
191 யா/க/1659 திரு. முருகேசு கந்தசாமி
192 யா/க/1662 திருமதி.அன்னப்பிள்ளை இரத்தினம்
193 யா/க/1670 திரு.கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
194 யா/க/1671 திரு.கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
195 யா/க/1672 திருமதி. செல்லம்மா கனகரத்தினம்
196 யா/க/1673 திருமதி. பரமேஸ்வரி மார்க்கண்டு
197 யா/க/1674 திரு.கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
198 யா/க/1682 திரு. வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
199 யா/க/1686 திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம்
200 யா/க/1691 திரு. கந்தவனம் இராஜதுரை
201 யா/க/1693 திருமதி.தெய்வானை கணபதிப்பிள்ளை
202 யா/க/1696 திரு. எகாம்பரம் சோமசுந்தரம்
203 யா/க/1699 திரு. சிற்றம்பலம் சின்னத்துரை
204 யா/க/1704 திரு. முருகப்பர் வேலுப்பிள்ளை
205 யா/க/1716 திருமதி.தெய்வானை பொன்னுச்சாமி
206 யா/க/1721 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
207 யா/க/1724 திரு. கந்தவனம் தங்கவேலு
208 யா/க/1731 திருமதி.விக்டோரியாராணி விக்ரர்இம்மானுவேல்
209 யா/க/1732 திருமதி. மகேஸ்வரி பாலசிங்கம்

(தொடரும்)

# காஸாவிலிருந்து இஸ்ரேலிய படையினர் திட்டமிட்டதற்கு முன்னர் வெளியேறுவர்!

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தகவல்



காஸா —

காஸாப் பகுதியிலிருந்து திட்டமிட்டதற்கு முன்னதாகவே இஸ்ரேலியப் படையினர் எதிர்வரும் திங்கட்கிழமையுடன் வெளியேறி விடுவரென இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் சாவுல் மொபாஸ் தெரிவித்தார்.

எனினும், காஸாப்பகுதியில் யூத குடியேற்றவாசிகளால் அமைக்கப்பட்ட வணக்கஸ்தலங்களை என்ன செய்வதென்ற நிலைப்பாடு காரணமாகவே படைவிலகல் தாமதமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதியிலுள்ள வணக்கஸ் தலங்களை அழிப்பதற்கு எதிராக இஸ்ரேலிய உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த வணக்கஸ்தலங்களை என்ன செய்வதென்பது குறித்து இஸ்ரேலிய அமைச்சரவை நாளை இறுதி முடிவு எடுக்குமெனவும், எனினும் வணக்கஸ்தலங்களை அழிப்பதற்கு எதிராகவே அமைச்சரவை வாக்களிக்குமென தான் எதிர்பார்ப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, காஸாவிற்கும் எகிப்திற்கும் இடையேயான எல்லைப் புறத்தை அடுத்த ஆறுமாதங்களுக்கு இஸ்ரேல் மூடியுள்ளது.

அடுத்தவாரம் நடைபெறவிருந்த ஐ.நாவின் கூட்டத்தொடரில் பங்கேற்கவிருந்த பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் அங்கு செல்லாமல், காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேல் படையினர் வெளியேறுவதை கண்காணிக்க உள்ளதாக தெரிவித்தார்.

காஸாப்பகுதியிலிருந்து இஸ்ரேல் படையினர் முழுமையாக வெளியேறிய பின்னர் அந்தப் பிரதேசத்தை பலஸ்தீன அதிகாரசபை பொறுப்பேற்கவுள்ளது. எனினும் காஸாவிற்கும், எகிப்திற்கும் இடையேயான எல்லைப் பகுதியை விட்டும் இஸ்ரேல் படை வெளியேற வேண்டுமெனவும், இல்லையெனில், அது முழுமையான வெளியேற்றமாக இருக்கமாட்டாதென பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், இந்தப் பகுதியூடாக கிளர்ச்சிவாதிகள் ஆயுதக்கடத்தலை நடத்திவருவதாகவும், அதனைத் தடுப்பதற்காகவே இந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.




# சிரிய படையினரின் தாக்குதலில் இரண்டு கிளர்ச்சிவாதிகள் பலி!

டமஸ்கஸ் —

சிரியாவின் வடகிழக்கு பகுதி நகரான கஸகாவில் சிரியப்படையினருக்கும், கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில், கிளர்ச்சிவாதி ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்தச் சம்பவத்தை தெரிவிக்க சிரிய அதிகாரசபை மறுத்துவிட்டது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் சிரியப் படையினர் அல் - சாம் கிளர்ச்சிவாத குழுவைச் சேர்ந்த ஐவரை சுட்டுக்கொன்ற சம்பவத்திற்குப் பின்னர் மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தக் குழுவினர் சிரிய தலை நகர் டமஸ்களில் குண்டுத்தாக்குதல் நடத்தத்திட்டமிட்டிருந்ததாக சிரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 38 போர் விமானங்களை சீனா ரஷ்யாவிடம் வாங்கவுள்ளது!

ரஷ்யாவிடம் இருந்து 38 போர் விமானங்களை வாங்குவதற்கு சீனா உடன்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்தானது.

முன்னர் ரஷ்யாவும் சீனாவும் எலியும், பூனையும் போல விரோதிகளாக இருந்தன. இப்போது இரண்டு நாடுகளும் இராணுவ ரீதியாக ஒத்துழைப்பு அளிக்கும் அளவுக்கு நெருங்கியுள்ளன.

சீனபாதுகாப்பு அமைச்சர் காவோ கங்சுவான் ரஷ்யா சென்றுள்ளார். இருதரப்புக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பு குறித்து 2நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தின. ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜில் வனோவ் உடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத் தொடர்ந்து 38போர் விமானங்களை வாங்குவதற்கு சீனா சம்மதித்தது. இதற்கான ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கையெழுத்திட்டன.

போர் விமானங்களுடன் போக்குவரத்து விமானங்களையும் எரிபொருட்களை நிரப்பஉதவும்விமானங்களையும் சீனா வாங்கவுள்ளது.

கடந்த மாதம் சீனாவும் ரஷ்யாவும் சேர்ந்து ராணுவ ஒத்திகைகளை மேற்கொண்டன. அடுத்த ஆண்டு இவ்விரு நாடுகளும் சேர்ந்து பாரிய அளவில் கூட்டுராணுவநடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றன.

# குர்திஷ் இன மக்களை கொன்றதாக சதாம் வாக்குமூலம் அளிக்கவில்லை!

## சட்டத்தரணி தெரிவிப்பு

பாக்தாத் —

இலட்சக்கணக்கான குர்து இன மக்களை கொல்ல உத்தரவிட்டதாக சதாம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று அவரது சட்டத்தரணி துலாய்மி தெரிவித்தார்.

ஈராக்கில் சதாம் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரது ஆட்சிக்கு எதிராக சிறுபான்மை இன குர்து இன மக்கள் போராட்டம் நடத்தினர். இவ்வாறு போராடிய குர்துக்கள் ஒரு லட்சத்து 82 ஆயிரம் பேரை நான் தான் கொல்ல உத்தரவிட்டேன் என்று நீதிபதியிடம் சதாம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து இருப்பதாகவும் அதை நீதிபதி தன்னிடம் தெரிவித்தார் என ஈராக் ஜனாதிபதி ஜலால் தலாபானி தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்தார். இதற்கு சதாமின் பிரதான சட்டத்தரணி துலாய்மி மறுப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குர்து இன மக்களை பெருமளவில் கொன்றதாக சதாம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் இதுவரை நடந்த விசாரணையில் சதாம் குற்றவாளி என நிரூபிக்கும்படியான எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை குர்து இன மக்களை கொன்றதென்ற குற்றத்தை சதாம் ஒப்புக்கொண்டாரா அல்லது பல்வேறு ராணுவ நடவடிக்கைகள் நடந்த போது ராணுவத் தளபதியாக தான் இருந்தேன் என்று கூறினாரா என்று கேட்ட போது அது குறித்து தலாபானி தனது பேட்டியில் எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சதாமை அவரது சட்டத்தரணி துலாய்மி கடைசியாக கடந்த திங்கட் கிழமை சந்தித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கத்ரீனா சூறாவளியை அடுத்து அமெரிக்காவின் பொருளாதாரம் பெருமளவு பாதிக்கப்படும் ஆபத்து

வொஷிங்டன் —

அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளி வீசியதில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்து விட்டனர் என்ற தகவல் ஒருபுறம் இருக்க, பொருளாதார பாதிப்பும் அதிகளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 4 லட்சம் பேரின் வேலைவாய்ப்புகள் பறிபோகும். நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 5 ஆயிரம் கோடி தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

கத்ரீனா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்க நாடாளுமன்றில் கடந்த வாரம் முதல்கட்டமாக ரூ.47 ஆயிரத்து 250 கோடி நிதி கேட்டு ஜனா திபதி புஷ் அறிக்கை தாக்கல் செய்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் மேலும் 5 ஆயிரம் கோடி தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையை அனுமதிப்பது குறித்து நாடாளுமன்றில் புஷ் இரண்டாவது முறையாக அறிக்கை தாக்கல் செய்வார். அதை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.



அமெரிக்க நிதி அமைச்சக இயக்குனர் டக்ளஸ் ஹோல்ட்ஸ் ஹியாகின் நாட்டின் பொருளாதார பாதிப்புகள் குறித்து கூறியதாவது-

* கத்ரீனா சூறாவளியால் அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சியில் கண்டிப்பாக பாதிப்புகள் இருக்கும். இருப்பினும் இந்தப் பாதிப்புக்களை சமாளிக்கக் கூடிய வகையில் இருக்கும். இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீள புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் பணியால் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். அதன் மூலம் வேலைவாய்ப்பு தேடுவோரின் பிரச்சனைகள் தீரும். கத்ரீனா வால் ஏற்பட்ட பாதிப்பு உண்மையில் துன்பம் நிறைந்த எதிர்காலத்தை ஏற்படுத்தி விட்டது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கத்ரீனா பாதிப்பால் நடப்பு ஆண்டில் ஒட்டு மொத்தமாக 4 லட்சம் வேலை வர்ய்ப்புகள் பறிபோகும் செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் முதல் 5 லட்சம் வரை வேலை வாய்ப்புகள் பறிபோகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த மாதங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வீடுகளுக்குத் திரும்புவர். வர்த்தக நிறுவனங்கள் செயல்படத் துவங்கும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கும். இதனால் வேலைவாய்ப்பு வசதிகள் பெருகும் என அவர் தெரிவித்தார்.

# மாகாணமட்ட விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டத்திலிருந்து வெற்றிபெற்றோர்!

(நேற்றைய தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பத்தாவது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகளில் - யாழ். மாவட்ட பாடசாலைகள் மற்றும் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்கள் வருமாறு :

### ஆண்கள்

### 17 வயதுப் பிரிவு

**உதைபந்தாட்டம் - இரண்டாமிடம்**
(புங்குடுதீவு மகா வித்தியாலயம்)
**கரப்பந்தாட்டம் - மூன்றாமிடம்**
புத்தூர் சிறி சோமஸ்கந்தாக் கல்லூரி -
**உயரம் பாய்தல் - முதலாமிடம்**
எம். மயூரன் (மத்திய கல்லூரி) -
**முப்பாய்ச்சல் - முதலாமிடம்**
எஸ்.நிதர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)
**கம்பூன்றிப் பாய்தல் முதலாமிடம்**
ரி.சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்)
**தட்டெறிதல் - முதலாமிடம்**
எம். பார்த்திபன் (மகாஜனாக் கல்லூரி) - ,
**100 மீற்றர் - மூன்றாமிடம்,**
ரி.தர்சன் (சென். ஜோன்ஸ் கல்லூரி)
**100 மீற்றர் தடைதாண்டல் - முதலாமிடம்,**
ரி.தர்சன் (சென். ஜோன்ஸ் கல்லூரி)
**1500 மீற்றர் - இரண்டாமிடம்**
ஜே.வியாசன் (மத்திய கல்லூரி)
**100 மீற்றர் தடை தாண்டல் - நான்காமிடம்**
பி.சிவதாஸன் (விக்ரோறியாக் கல்லூரி)

### 19 வயதுப் பிரிவு

**4X400 - இரண்டாமிடம்**
சென். பற்றிக்ஸ் கல்லூரி
**4X400 - மூன்றாமிடம்**
யாழ். இந்துக் கல்லூரி
**உடற்பயிற்சி - (சம்பியன்)**
சென்.அந்தோனி கல்லூரி
**உடற்பயிற்சி - இரண்டாமிடம்,**
ஹாட்லிக் கல்லூரி
**சதுரங்கம் - சம்பியன்,**
யாழ். இந்துக் கல்லூரி
**சதுரங்கம் - இரண்டாமிடம்,**
மகாஜனாக் கல்லூரி
**பூப்பந்தாட்டம் - மூன்றாமிடம்,**
உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்
**மேசைப்பந்தாட்டம் - சம்பியன்,**
மத்திய கல்லூரி -
**கூடைப்பந்தாட்டம்**
சென். ஜோன்ஸ் கல்லூரி (இரண்டாமிடம்) - யாழ். இந்துக்கல்லூரி (மூன்றாமிடம்)
**உயரம் பாய்தல் -** ஜி.சோபிநாத் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (முதலாமிடம்) -
எஸ். சத்தியமூர்த்தி (யாழ்ப்பாணக் கல்லூரி) -(இரண்டாமிடம்)
**கோலூன்றிப் பாய்தல் -**
எஸ். நவநீதன் முதலாமிடம் (அருணோதயாக் கல்லூரி), எம்.கிருஷாந் மூன்றாமிடம் (தேவரையாளி இந்துக் கல்லூரி)
கமிலாஸ் ஆன்ற்மியோ சாம்ஸன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி) -
**குண்டெறிதல் - முதலாமிடம்,**
கமிலாஸ் ஆன்ற்மியோ சாம்ஸன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)
**தட்டெறிதல் - முதலாமிடம்,**
ரி.பரணீதரன் (மகாஜனாக் கல்லூரி),
**ஈட்டியெறிதல் - மூன்றாமிடம்,**
எஸ்.அதாஸ் மூன்றாமிடம் (யாழ்ப்பாணக் கல்லூரி)
**800மீற்றர் - மூன்றாமிடம்,**
எஸ்.சிவசுகிர்தன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)
**1500 மீற்றர் - இரண்டாமிடம்,**
ஆர்.கஜேந்திரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)
**1500 மீற்றர் - மூன்றாமிடம்,**
ரி.பிரதீஷ் (வட்டு. இந்துக் கல்லூரி)

### 21 வயதுப் பிரிவு

**200 மீற்றர் - நான்காமிடம்,**
சி.விமல்ராஜ் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)
**உயரம் பாய்தல் - முதலாவது இடம்,**
எஸ்.ரஜீவன் (ஹாட்லிக் கல்லூரி)
**1500 மீற்றர் - 4ஆம்இடம்,**
ரி.ஜெயந்தன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)
**100 மீற்றர் தடைதாண்டல் - இரண்டாம் இடம்,** ஜி.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி)
**400 மீற்றர் - முதலாமிடம்,**
ஏ.ஜே.அன்ரன் றஜீம்ராஜ் (சென். ஹென்றிஸ் கல்லூரி)


# மரண அறிவித்தல்

## தேவகி தவேந்திரநாதன்



கிளானை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், உடுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தேவகி தவேந்திரநாதன் 09.09.2005 அன்று இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் சின்னத்துரை நாகேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பு சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், தவேந்திரநாதன் (ராசன்)(தெ.ப.நோ. கூ.ச)அவர்களின் அருமை மனைவியும், தர்ஷிகா, பிரதீப், திலக்ஷன், திலக்ஷிகா (மகாஜனக்கல்லூரி மாணவர் தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத்தாயாரும், துவாரகை, ஜீவகி, கிருஸ்ணகுமார், சியாமளா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, வைரமுத்து, தவமணிதேவி, இராசபூபதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.09.2005 இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை களுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி
சங்குவேலி தெற்கு
மானிப்பாய்

தகவல்
தவேந்திரநாதன்(ராசன்)
(கணவர்)

(2048)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் வெற்றிக்கான அடித்தளம்!

## இப்படிக் கூறுகிறார் மங்கள

கொழும்பு—

பிரதமர் மகிந்தவிற்கும் ஜே.வி.பிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் மாபெரும் வெற்றிக்காக போடப்பட்ட அடித்தளமென அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரேயே அறுபது சதவீத மக்களின் ஆதரவு ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது.

ஐ.தே.கட்சியின் மிக நெருக்கமானவர்களும் பிரதமருக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். அத்துடன் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு அரசியல் கட்சிகள் தமது ஆதரவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவித்துள்ளன.

ஐ.தே.கட்சி தற்போது பலமிழந்த நிலையிலுள்ளது. ஏனெனில் அவர்களின் கருத்துக்கணிப்பு முடிவுகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவார் எனத் தெரிவித்துள்ளன.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் எடுக்கும் முயற்சிகளுக்கு அனைத்துக் கட்சிகளும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா - எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக தாம் முழுமையாகச் செயற்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஜே.வி.பிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை - யுத்தத்திற்கு வழிவகுக்கக்கூடியதென சிலர் தெரிவித்து வருவதில் எவ்வித உண்மையும் இல்லை.

ஐ.தே.கட்சியை போலில்லாது கௌரவமான சமாதானத்திற்காக தாம் எப்போதும் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# வவுனியா அரசியல் பொறுப்பாளருடன் கண்காணிப்புக்குழுநேற்றுச் சந்திப்பு!

## புளியங்குளத்தில் நடைபெற்றது

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானத்துடன் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான புளியங்குளத்தில் நடைபெற்றது.

அண்மைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் வவுனியாவிலுள்ள புலிகளின் அரசியற்துறைப் போராளிகளின் பாதுகாப்புக் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

ஈச்சங்குளத்தில் தமிழீழத் தேசியக் கொடியை இறக்கமறுத்த அரசியற்துறை போராளியை இராணுவத்தினர் அச்சுறுத்திய சம்பவம் குறித்து கண்காணிப்புக்குழுவிடம் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் முறைப்பாடு செய்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அரசியற்துறைப் போராளிகள் மீளப்பெறப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட முதலாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு ஐ.நாவை அரசு அழைக்கவில்லை!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு—

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் சபையை இணைத்துக்கொள்ளப்போவதாக வெளியான செய்திகளை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வேயை வெளியேற்றிவிட்டு சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு எதுவித அழைப்பும் விடுக்கவில்லை.

சிறுவர்களைப் படையில் சேர்த்தல், அரசியல் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தே கவனம் செலுத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் இலங்கை அரசாங்கம் கேட்டதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது தாமதம்!

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முடிவடையும்வரை தேர்தல் நடைபெறும் திகதி மற்றும் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும் திகதி என்பவற்றை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவது தாமதமாகுமென தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தலுடன் தொடர்புடைய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அந்தந்த மாவட்டங்களின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் - தேர்தல் திணைக்களத்துக்கு மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மூலம் அனுப்பி வைக்கப்படாமையால் வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவது மேலும் தாமதமாகுமென தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கப்பட்டவுடன், தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பப்படல் வேண்டுமென அனைத்து தபால்மூல வாக்காளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# ஊடகங்களை கட்டுப்படுத்த அதிகாரி நியமிக்கப்படுவார்!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களை கட்டுப்படுத்தும் அதிகாரி, நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே நியமிக்கப்படுவாரென தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தில் அடங்கியுள்ள ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் ஆணையாளரது அதிகாரங்களுக்கு அமைய அந்த நடவடிக்கை இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க கண்காணிப்பாளர்களை அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (தே)

# நிதியமைச்சர் அமுனுகமவுக்கு வலை வீசுகிறது ஐ.தே.கட்சி!

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவை மீண்டும் ஐ.தே.கட்சியில் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம இந்தப் பேச்சுவார்த்தையில் முக்கிய இடம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இந்தப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து எவ்வித தகவலும் தெரியவரவில்லை.

இதேவேளை, ஊடகத்துறை அமைச்சர் டிலான் பெரேராவையும் ஐ.தே.கட்சியில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

## புலிகளின்...

விசேட அதிரப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர். ஆறுபேர் காயடைந்திருந்தனர்.

இதன் காரணமாகவே விசேட அதிரடிப் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட சோதனைச் சாவடிகள் ஊடாக மண்முனை-கொக்கட்டிச்சோலை வாவி, அம்பிலாந்துறை-குருக்கள்மடம் வாவி மற்றும் பட்டிருப்பு பாலம் ஊடாக போக்குவரத்துக்கு தடை விதித்தனர்.

இந்தத் தடையால் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லமுடியாத நிலையில், இடையில் வீட்டுக்குத் திரும்பிவிட்டனர். அங்கு பாடசாலைகள், அரச அலுவலகங்களின் பணிகள் முற்றிலும் பாதிப்படைந்திருந்தன.

## இராணுவ...

அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இவரது உடலில் ஒன்பது துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் மா.இளஞ்செழியன் பொலிஸ் விசாரணைகளைத் தொடருமாறு பணித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து வவுனியா நகரில் பெருமளவு படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அதேவேளை, நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாய் இராணுவ முன்னோடிப் படைப் பிரிவை (Pioneer Corps) சேர்ந்தவரென இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

## மகிந்தவை....

குறிப்பாக சுனாமிக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட பொதுக்கட்டமைப்பைக் கைவிடுதல், ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் போன்ற விடயங்களை ஏற்றுக்கொண்டிருப்பதன் மூலம், சுதந்திரக்கட்சியின் ஒழுக்காற்று விதிகளை பிரதமரான நீங்கள் மீறியுள்ளீர்கள். அத்துடன், சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு என்பது அமைச்சரவையாலும், சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுவாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிரதமரால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு ஆவணம். இதனை முற்றாகக் கைவிடும் அதிகாரத்தை பிரதமருக்கு கட்சி வழங்கவில்லை.

அத்துடன் - ஒற்றையாட்சியின் கீழ் உலகில் எந்த நாட்டிலும் அதிகாரங்களைப் பகிரமுடியாது. அவ்வாறுள்ள நிலையில் இணைந்த இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கம் மூலம் தான் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியுமென்ற சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டை மாற்றும் பொறுப்பு பிரதமருக்கு இல்லையெனத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியாலும் அமைச்சரவையாலும் பிரதமராகிய உங்களாலும் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்ட சுனாமி பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பதற்கு ஒரு தலைப்பட்சமாக ஒப்புதல் தெரிவித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளீர்கள்.

உங்களின் அனைத்துச் செயற்பாடுகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்கை மீறுவதாக உள்ளது என்று எச்சரித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மீது கடும் கோபம் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா - அவரை அதிரடியாக கட்சியை விட்டு நீக்கும் நடவடிக்கையை எடுக்கலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

DAY CLASS
A/L - 2006
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
செப்ரெம்பர்– 12 (திங்கள்)
காலை 8.30 மணிக்கு
DMI
Jaffna
[C/4573]

## புறாவ்....

பேச்சுக்களை எந்த இடத்தில் நடத்துவது என்பது குறித்து முடிவு மேற்கொள்ள இயலாமல் இருப்பது குறித்து நோர்வே வருத்தம் கொள்கிறது.

அதேவேளை, போர்நிறுத்த அமுலாக்கப் பேச்சுக்களை நடத்துவதற்கான இடம்குறித்து விவாதிக்க இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவரான ட்ரொன்ட் புறூவ் கொவ்டே அடுத்த மாதத்துக்குள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

போர்நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக இரு தரப்பினருடனும் ட்ரொன்ட் புறூவ்கொவ்டே பேச்சுக்களை நடத்துவார் என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## இலங்கை....

திரும்ப வேண்டும்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை மேற்கொள்ள வேண்டுமென்றே ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## புளொட்....

அவருடன் கூடநின்ற செல்வராசா பார்த்திபன் (வயது 24) காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சம்பவ இடத்திலிருந்து மைக்ரோ பிஸ்டல் மகசின் ஒன்றும், ஆறு ரவைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் விசாரணைகளை நடத்துமாறும் -மேலதிக விசாரணைகளைத் தொடருமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து அந்தப் பகுதியில் படையினரும், பொலிஸாரும் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## பாதுகாப்பதற்கு...

பகுதிகளுக்கு இடமாற்றம் செய்தல், புலனாய்வுப் பிரிவிலிருந்து விலக்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதன்படி - திருகோணமலைக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் மஹதன் திலக திடீரென கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணத்தில் இருந்த மேஜர் பிரபாத் அங்கிருந்து விலக்கப்பட்டுள்ளார். வவுனியாவில் கடமையாற்றிய மேஜர் பிரியங்கவதா உபுலேகம இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுள்ளார். கொழும்பு இராணுவ தலைமையகத்தில் பணியாற்றிய மேஜர் சாலே அந்தப் பதவியிலிருந்து விலக்கப்பட் டுள்ளார்.

தற்போது விடுதலைப் புலிகளின் கடுமையான அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கொழும்பு புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் சமன்வெதகமகே வவுனியாவுக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் விடுதலைப் புலிகளால் தனக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து வெளிநாடு செல்வதற்கு அனுமதி கேட்டிருந்த நிலையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் - கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றும் மேஜர் மஜித் சேவையிலிருந்து விலகத் தீர்மானித்திருப்பதாகவும் இவரைவிட மேலும் பலர் பணியில் இருந்து விலகத் தயாராகவுள்ளதாகவும் இராணுவத் தகவல்கள் தெரிவித்ததாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (தே)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நவரட்ணம்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நவரட்ணம் அவர்கள் (07.09.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - கனகாம்பிக்கை தம்பதிகளின் மூத்த புதல்வனும், பஞ்சரட்ணம், காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் வரதராஜா, தவமணிதேவி, குணரட்ணம், சிறீரட்ணம், ரூபரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமணியின் அன்புக் கணவரும், நவநீதன் (சுவிஸ்), நவரஞ்சன் (ஜேர்மனி), நவஜீவன், சுபாங்கி, சித்திராங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராஜசிங்கம் (இந்தியா), சிவராஜசிங்கம் (சவுதி) மன்மதராஜசிங்கம் (கனடா) நீலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய். (2046)

தகவல்:
குடும்பம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மொழித் திறன் போட்டிகள்!

உடுவில் —

ஒக்ரோபர் மாதம் கொண்டாடப்படவுள்ள உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு - பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களிடம் மொழித்திறனை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் போட்டி நடத்தி பணப் பரிசிலும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்றுநிருபம் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால், சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை தமிழ் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து, தமிழ் மொழி மூல ஆசிரியர்களிடையே மொழித்திறன் விருத்தி, ஆக்கத் திறன் விருத்தி, தமிழை பிழையறக் கற்பிக்கும் திறன், வாசிப்புத் திறன், தூய தமிழ் பயன்பாட்டு அறிவை மேம்படுத்தல் என்பனவற்றை ஆசிரியர்களிடம் வளர்த்தெடுக்கும் நோக்கிலும், ஆசிரியர்களை கௌரவிக்கும் நோக்கிலும் போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிகளில் சகல தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும், தொண்டர் ஆசிரியர்கள், பகுதிநேர ஆசிரியர்களும் பங்குபற்ற முடியும்.

இந்தத் தேர்வுக்குரிய வினாத்தாள் பகுதி I, II என இரு பகுதிகளைக் கொண்டதாகும். பகுதி I இல் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகள் கொண்ட பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்களுக்கான குறுவினாக்கள், சுட்டிப்பாக விடையிறுக்கும் வினாக்கள், தமிழறிவு, தமிழ் இலக்கண வளர்ச்சி, இலக்கிய வரலாறு என்பவற்றை உள்ளடக்கியதாகவும் - பகுதி II இல் மூன்று பிரிவுகளைக் கொண்டதான தமிழ் மொழியில் கட்டுரை எழுதும் திறன், தமிழ் பெரியார்கள், அறிவியல், கணினி, தகவல் தொழில்நுட்பம், சமகால சிக்கல்கள், கவிதை, சிறுகதை, நாடகம் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் அமையும். தேர்வு காலை 10 மணி முதல் 1 மணி வரை நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்களில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் முதல் ஐந்து ஆசிரியர்களுக்கு வெள்ளிப்பதக்கங்களும், ஒவ்வொருவருக்கும் 5,000 ரூபா பணப்பரிசும், சான்றிதழும் ஆசிரியர் தினத்தன்று வழங்கப்படும். மேலும், வலயங்கள் தோறும் கூடிய புள்ளிகளைப் பெறும் மூன்று ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்பும் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் உடனடியாக விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை என்னும் முகவரிக்கு 17.09.2005 சனிக்கிழமைக்கு முன்பாக நேரிலோ, தபாலிலோ அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார். மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம். (101)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம் —

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்துவதற்கு சிறுவர் இல்லங்கள் ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, நாடகம், பாட்டு, பேச்சு போன்ற பல போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறுவர் இல்லங்களால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போட்டிகள் தொடர்பான சுற்றுநிருபங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிறந்த சனசமூக நிலையங்களை தெரிவு செய்வதற்கான போட்டி!

யாழ்ப்பாணம் —

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்து, சமூக மேம்பாட்டை வளர்க்கும் நோக்கில் - எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தில் சிறந்த சனசமூக நிலையங்களைத் தெரிவு செய்வதற்கான போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் சொந்தக் காணியில் கட்டடம் அமைந்துள்ளதும், பாலர் பாடசாலை, நூலகம், தளபாடங்கள், பொது சன தொடர்புச் சேவை வசதிகள் ஆகியவற்றைக் கொண்டதும், மதாந்த கூட்ட மற்றும் அதற்கான நிர்வாகச் செயற்பாட்டு அறிக்கைகளைப் பூரணமாகப் பேணி வருவதுமான சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட போட்டியில் கலந்துகொள்ள தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ளுமாறு - யாழ். மாநகரசபைச் செயலாளர் திருமதி ம. வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

# அரசாங்க காணிகளைப் பெற்றவர்கள் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கவும்

சுதுமலை —

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரச காணிகளைப் பெற்றவர்கள், அந்தக் காணிகளில் அபிவிருத்தி வேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு உதவி அரசாங்க அதிபர் சிறிமோகன் பணித்துள்ளார்.

இந்தப் பிரிவில் அரச காணிகளைப் பெற்றவர்கள் சிலர் இதுவரைக்கும் அந்தக் காணிகளில் எந்தவித வேலைகளையும் செய்யாதுள்ளனர். எனவே, இவ்வாறு அரச காணிகளைப் பெற்றவர்கள் அந்தக் காணிகளில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளாதுவிடின், அந்தக் காணிகள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (44)

# வருடாந்த மஹோற்சவம்

நெடுந்தீவு —

வேலணை வடக்கு இலந்தைவனம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம், கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இந்த உற்சவம் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது.

13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், இரவு தீமிதிப்பும் இடம்பெறவுள்ளதுடன், 14 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு சப்பரத்திருவிழாவும், மறுநாள் காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 16 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (113)

# இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தின் சேக்கிழார் மாநாடு போட்டி முடிவுகள்!

யாழ்ப்பாணம் —

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்திய சேக்கிழார் மாநாடு போட்டி முடிவுகள் வருமாறு -

### பேச்சுப்போட்டி

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் - சின்னத்துரை சோபிதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம் - மைதிலி மோகனராசன் (வட்டு. மத்திய கல்லூரி),

**மேற்பிரிவு**

முதலாம் இடம் - ரேக்கா தேவேந்திரம் (மல்லாகம் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் - கந்தசாமி சுதாஸ்கரன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

### பண்ணிசை

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - சே.சோபிகா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), இரண்டாம் இடம் - சி.ரஜித் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

முதலாம் இடம் - அழகேசன் அமிர்தசிந்துஜன் (இணுவில் மத்தியகல்லூரி).

**மேற்பிரிவு**

முதலாம் இடம் - வாசுகி கிருஷ்ணன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி)

### நாடகம்

1 ஆம் இடம் - மீசாலை இந்து இளைஞர் மன்ற ஆரம்ப அறநெறிப் பாடசாலை, 2 ஆம் இடம் - வடமராட்சி உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை

### சைவசமய பொது அறிவுப் போட்டி

ப.ஐங்கரன் A - 50.84% சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சி.கஸ்தூரி A - 84.79% மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், ச.ஜனனி A - 20.79% கொக்குவில் இந்துக்கல்லூரி.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பிரதேசசபைக்கு புதிய கட்டடம்

சுதுமலை —

வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகப் பாவனைக்கென 90 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

'நீர்ப்' திட்டத்தின்கீழ் இந்தப் புதிய கட்டட நிர்மாணிப்பு வேலைகள் இடம்பெற்று வருவதாகவும், மிகவிரைவில் புதிய கட்டடத்தில் பிரதேசசபையின் அலுவலகம் இயங்கவுள்ளதாகவும் பிரதேசசபை செயலர் கை. மகேந்திரலிங்கம் தெரிவித்தார். (91)

### புதிய கட்டடம் அமைப்பு

சுதுமலை —

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பாவனைக்கென -"புதிய கட்டடமொன்று நிகொட் திட்டத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். புதிய கட்டடத்துக்கான அத்திவாரக்கல் அதிபரால் நாட்டப்பட்டு, கட்டட வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வருட இறுதிக்குள் கட்டட வேலைகள் முடிவடைந்து, புதிய கல்வியாண்டில் கட்டடம் பாவனைக்கு வருமெனவும் அதிபர் க.சிவாஜி தெரிவித்துள்ளார்.

### வீடமைப்பு திட்டம்

வடமராட்சி —

பருத்தித்துறை - புனிதநகர் கே.பி.எம்.ஜி கிராமத்தில் நூறு வீட்டுதிட்டத்தின் மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் 500 சதுர அடிகளைக் கொண்ட 50 வீடுகளை அமைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டு, கடந்த 6 ஆம் திகதியன்று அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

இதற்கான உயர்மட்டக் குழுவில் அரச அதிபர் கணேஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ், பாலையா, சிவரஞ்சினி, மேலதிக அரச அதிபர் சிவசுவாமி, ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சபேசன், ஆசீர்வாதம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (29)

# எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு 14 ஆயிரம் புலமைப்பரிசில் திட்டம்

சுதுமலை —

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபையால் 14 ஆயிரம் புலமைப்பரிசில் திட்டங்கள் நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு இலங்கை சமுர்த்தி அதிகாரசபை - 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட, பாடசாலை செல்லாத பிள்ளைகளை கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாகத் தெரிவுசெய்து, அவர்களுக்கு மாதாந்தம் 250 ரூபா வீதம் வருடாந்தம் 3 ஆயிரம் ரூபாவை புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கென பாடசாலை செல்லாத சிறுவர்களின் பெயர் விபரங்களை சமுர்த்தி அலுவலர்கள் தெரிவுசெய்து வழங்கவேண்டும் எனவும், குறைந்தது ஒரு புலமைப்பரிசில் திட்டமாவது ஒரு கிராம அலுவலர் பிரிவில் செயற்படுத்தல் வேண்டும் எனவும் சமுர்த்தி அலுவலர்களைப் பணித்துள்ளதுடன்,

அதிகூடிய புலமைப்பரிசில்களை வழங்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

# சிவகுரு வித்தியாலயம் புதிய கொட்டகையில்

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வல்வை சிவகுரு வித்தியாசாலை 05.09.2005 இல் இருந்து வல்வை சிவபுர வீதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகளில் இயங்க ஆரம்பித்துள்ளது. தற்காலிக கொட்டகைகளை யுனிசெப் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பசுந்தாள் பசளையைத் தயாரிக்க யாழ். மாநகரசபை நடவடிக்கை!

யாழ்ப்பாணம் —

யாழ். நகரசபையில் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் மூலம் பசுந்தாள் பசளையைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் யாழ்.மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து நாளாந்தம் ஏராளமான கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டு வருகின்றன. அகற்றப்படும் கழிவுப் பொருட்கள் தரம் பிரித்து, அதில் இருந்து இயற்கைப் பசளை தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இயற்கைப் பசளை தயாரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக காக்கைதீவில் மாநகர சபைக்குச் சொந்தமான நிலப் பரப்பில் பல கோடி ரூபா செலவில் "நோராட்" நிறுவனத்தின் நிதியுதவியுடன் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


கட்டட வேலைகள் பூர்த்தியாகும் நிலையை அடைந்துள்ளதாகவும், இதன் வேலைகள் இன்னும் சில நாட்களில் பூரணமாக முடிவடைந்து விடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இயற்கைப் பசளையைத் தயாரிப்பதன் மூலம் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் தாமதம் ஏற்படாமலும், நகரைச் சுத்தமாகவும் வைத்திருக்கக் கூடியதாக இருக்கும்.

கழிவுப்பொருட்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் இயற்கைப் பசளையை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில்
# கிணறுகளின் உவர்த்தன்மையை மதிப்பீடு செய்வதற்கான பயிற்சி





கிளிநொச்சி —

நேற்றுமுன்தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலுள்ள கிணறுகளின் உவர் நீர்த் தன்மையை மதிப்பீடு செய்வதற்கான பயிற்சிப்பட்டறை இடம் பெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறை நீர் சுகாதார பொறியியலாளர் மு.கேசவன் தலைமையில் இடம்பெற்றது.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசங்களில் காணப்படும் பெரும்பாலான கிணறுகளிலுள்ள நீர், உவர்த்தன்மையடைந்துள்ளது. அத்துடன் அந்தப் பிரதேசங்களை அண்டிய நன்னீர் ஊற்றுக்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்த உவர்த்தன்மை எதிர்வரும் பருவகால மழையுடன் மாற்றமடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இதனை உறுதி செய்யும் முகமாக பருவகால மழைக்கு முன்னரும், பின்னரும் உவர்த் தன்மை தொடர்பான மதிப்பீடு ஒன்றைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளது. இதற்கான பயிற்சிப்பட்டறையே நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க நீர் சுகாதாரப் பொறியியலாளர் கேற், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வெளிக்கள உத்தியோகத்தர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றினர். இந்தப் பயிற்சிப்பட்டறையில் கேற் அவர்களால் வெளிக்கள உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் நாளையும், நாளை மறுதினமும் இந்த மதிப்பீடு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசியஎழுச்சி பிரகடனத்துக்கான ஏற்பாடுகள் பூர்த்தி !

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளது என, முல்லைத்தீவு மாவட்ட செயலணிக் குழுவின் ஊடகப் பொறுப்பாளர் தேவதாஸ் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த எழுச்சிப் பிரகடனத்தை முன்னிட்டு - புதுக்குடியிருப்பு, மாங்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்கள் விழாக் கோலம் பூண்டுள்ளன.

இது தொடர்பான எழுச்சிக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. இதற்கென முல்லைத்தீவு மாவட்ட செயலணிக் குழு, பிரதேச செயலணிக் குழுக்கள், கிராமிய உப குழுக்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு எழுச்சிப் பிரகடன நிகழ்வானது - வவுனியா தேசியஎழுச்சி மாநாட்டுக்கு பலம் சேர்க்கும் வகையிலும், தமிழ் மக்களின் ஒரு மித்த குரலை சர்வதேசத்துக்கு வெளிப் படுத்தும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறந்து வைப்பு

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில்அதிதீவிர சிகிச்சைப் பிரிவு உட்பட, நோயாளர் விடுதி, எக்ஸ்ரே பிரிவு ஆகியன கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விக்கிரமன் திறந்து வைத்தார். நோயாளர் விடுதியை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் திறந்து வைத்தார். எக்ஸ்ரே பிரிவை நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

## மன்னார் வந்தடைந்த இரண்டு இளைஞர்கள் விளக்கமறியலில்

மன்னார் —

இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் தலைமன்னாரை வந்தடைந்த, புத்தளத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மன்னார் மாவட்ட நீதிவான் அப்துல்லா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இலங்கை அகதிகள் 13 பேர் கடந்த 5 ஆம் திகதி இரவு இராமேஸ்வரத்தில் இருந்து, இந்திய மீன்பிடிப் படகில் தலைமன்னாருக்கு வந்தனர்.

இந்திய மீன்பிடிப் படகுகளில் வந்து மண்மேட்டில் இறக்கி விடப்பட்ட இவர்களை கடற்படையினர் கைதுசெய்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் இவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது, குறிப்பிட்ட இரு இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும், ஏனைய அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறும் மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

## காலச் சுவட்டில்...

**செப்ரெம்பர் ~ 10** இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

1281: காசோலை எழுதும் நடைமுறை ஆரம்பமாகியது. முதலாவது காசோலை இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்ட்டால் எழுதப்பட்டது.

1746: தமிழ் நாட்டின் சென்னை நகரம் பிரான்ஸுக்காரரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1909: அமெரிக்காவின் லூசியானா மிஸிஸிப்பி ஆகிய நகரங்களில் கடுமையான புயல் வீசியது. நூற்றுக்கணக்கானவர்கள் மரணமடைந்தனர்.

1918: எதிரிகளது தகவல் பரிமாற்றத்தை உளவறியும் வகையில், முதன் முதலாக அமெரிக்க இராணுவத்தில் வானொலிப் படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1931: பிரிட்டிஸ் அரசு எடுத்த கடுமையான பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக லண்டனிலும், கிளாஸ்கோவிலும் பெரும் கலவரம் ஏற்பட்டது.

1931: பிரிட்டிஸ் ஹொண்டூராஸில் அடித்த சூறாவளியால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

1943 : ஜேர்மனி - ரோம் நகரைக் கைப்பற்றியது.

1956: சுயஸ் கால்வாய் தொடர்பாக எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இளல்லை என எகிப்திய அதிபர் நாஸர் தெரிவித்தார்.

1962: பொதுச்சந்தையில் பிரிட்டனைச் சேர்ந்துக் கொள்வது தொடர்பாக 15 கொமன் வெல்த் நாடுகளதும், ஒன்பது குடியேற்ற நாடுகளதும் தலைவர்கள் லண்டனில் ஒன்று கூடிக் கலந்துரையாடினர்.

1974: மேற்கு ஆபிரிக்காவில் போர்த்துக்கல் குடியேற்ற நடாக இருந்த போர்ச்சுக்கீஸ் கினியா சுதந்திரம் அடைந்தது. தனது பெயரை கினியா பிஸ்ஸாவ் என்று மாற்றிக்கொண்டது.

1976: யூகோஸ்லேவியாவின் ஸ்பிளிட் என்னுமிடத்தில் இருந்து கோலேகனுக்குச் சென்று கொண்டிருந்த யூகோஸ்லேவியா விமானம்ஒன்றும், லண்டனில் இருந்து இஸ்ரான் புல்லுக்கு சென்று கொண்டிருந்த பிரிட்டிஸ் எயார்பஸ் விமானமும் யூகோஸ்லேவியாவின் நடுவானில் நேருக்குநேர் மோதி விழுந்தன. இதில் 176 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

1978: ஷியா உல் ஹக் பாகிஸ்தானின் ஜனாதிபதியானார்.

1979: அணுகாந்த அதிர்வு பற்றிய ஆய்வுக்காக 1952 ஆம் ஆண்டின் பௌதீகவியலுக்கான நோபல் பரிசை வென்ற அணு விஞ்ஞானி ஃபெலிக்ஸ் ப்ளோக் சூரிச் நகரில் காலமானார்.

1981: பிக்காஸோவினுடைய கௌர்னிகா என்ற ஓவியம் 40 வருடகாலத்துக்கு பிறகு அமெரிக்காவால் ஸ்பெயினிடம் ஒப்படைக்கப்பட்டது. ஸ்பெயினில் ஜனநாயகம் மலரும் வரை தனது ஓவியங்களை ஸ்பெயினுக்கு காட்ட பிக்காஸோ மறுத்திருந்தமையே இதற்குக் காரணமாகும்.

1993: இஸ்ரேலுக்கும், பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் இடையே வரலாற்றுப் புகழ் மிக்க நல்லுறவு உடன்படிக்கை ஏற்பட்டது. இந்தஇரு நாடுகளுக்கும்இடையிலான 30 வருடகால முரண்பாடுகளுக்கு இந்த உடன்படிக்கை முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இஸ்ரேலும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் பரஸ்பரம் அங்கீகாரம் அளித்துக் கொண்டன.

1994: கினியா பிஸ்ஸாவ் சுதந்திர தினம்.

தொகுப்பு - சந்துரு

## வன்னியில் இரு கணினி நிலையங்கள் நிதிப்பற்றாக்குறையால் மூடப்படும் நிலையில்

கிளிநொச்சி —

தமிழர் தாயகப் பிரதேசத்தில் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் மற்றும் டைடா நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்ற 15 இற்கும் மேற்பட்ட இலவச கணினி நிலையங்களின் மாதாந்த செலவுகளை எதிர்கொள்ள முடியாமல், வன்னிப்பிரதேசங்களில் அமைந்துள்ள இரு நிலையங்களையும் மூடும்நிலை ஏற்பட்டுள்ளது என, டைடா நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

இலவசமாக உங்களுக்கு கணினி அறிவை வழங்குகிறோம் என்று கூறிவிட்டு, இன்று இடை வழியில் கைவிடுவது கவலைக்குரியது.

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிர்வாக சபையில் அண்மையில் ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து, இந்த நிலைகளுக்கான மாதாந்த செலவுத் தொகை அனுப்பப்படாமையே கணினி நிலையங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு காரணமாகும். இலவசமாக இந்தக் கணினி நிலையங்களை நடத்துவதற்கு உறுதியளித்த லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிர்வாகசபை, தற்பொழுது மாதாந்த செலவுத் தொகையை அனுப்புவதில்லை. இதனால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, தமது கணினிக் கல்வியை இடைநிறுத்தாது, தொடர்ந்து கற்பதற்கு உதவ வேண்டுமென லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிர்வாக சபையிடம் இந்த நிலையங்களில் பயின்றுவரும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கண்டாவளை பிரதேசத்தில் ஆக்கபொருட் கண்காட்சி !

கண்டாவளை —

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன்முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் - கண்டாவளைப் பிரதேசத்தில் முன்பள்ளிகளுக்கான ஆக்கப் பொருட்கண்காட்சி கடந்த புதன் கிழமை காலை 10 மணிக்கு, தர்மபுரம் கானான் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சி - கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில்மங்களவிளக்கை கல்மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் இரவீந்திரன், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன செயலாளர் திருமதி. பரமேஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடி மற்றும் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனக் கொடி என்பன ஏற்றப்பட்டன.

கண்காட்சி மண்டபத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் ராஜன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். இந்தக் கண்காட்சியில் கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி பயின்றுவரும் மாணவர்கள், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோரின் ஆக்கப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட 30 முன்பள்ளிகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மின் விநியோகத்துக்கு 12 மில்லியன் ஒதுக்கீடு

மன்னார் —

மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வட்டக் கண்டல், ஆண்டாங்குளம்உள்ளிட்ட மேலும் சில கிராமங்களுக்கான மின்சார விநியோகத்திட்டத்துக்காக எரிபொருள் மின்சக்தி, அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த 12 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

## கண்டெடுப்பு

வட்டக்கச்சி —

செல்வராசா கேதீஸ்வரன் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, வட்டக்கச்சி காவற்துறை பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும் என, வட்டக்கச்சி காவற்துறையினர் கேட்டுள்ளனர். (9)